விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 30 வியாழக்கிழமை (13.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 145

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# இரண்டாம் கட்டப் போராட்டம் புலிகளுக்கு எதிராக ஆரம்பம்

## பருத்தித்துறையில் பாரிய குண்டுச் சத்தம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகரப்பகுதியில் உள்ள இராணுவ முகாமிற்குள் நேற்று அதிகாலை 4 மணியளவில் பாரிய குண்டு சத்தங்களும் துப்பாக்கி வெடிச்சத்தங்களும் கேட்டதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன.

இச் சம்பவம் தவறுதலாக இடம்பெற்றதாக படைப்பிரிவில் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

எனினும் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. (ஏ)

## ★ இராணுவம் தெரிவிப்பு ★

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான இரண்டாம் கட்ட யுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சர்வதேச ரீதியான பிரசாரங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## பெண்ணைத் தாக்கிய சம்பவம் சகோதரர்கள் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் பெண் ஒருவரைக் கொலை செய்யும் நோக்கில் கத்தியால் குத்திப் பற்றைக்குள் போட்ட சம்பவம் தொடர்பில் உடுப்பிட்டியைச் சேர்ந்த சகோதரர்களான இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு நேற்றுப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களை விசாரணை செய்த பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிவான், எதிர்வரும் 26 ஆம் திகதி வரை தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## விஷம் கொடுத்துக் கொல்லச் சதி சிறையில் நளினி அபாயக் குரல்

(கொழும்பு)

ராஜீவ் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு வேலூர் பெண்கள் சிறையில் இருந்து வரும் நளினி, உணவில் விஷம் கலந்து தன்னைக் கொல்ல முயற்சி நடப்பதாகத் திடுக்கிடும் முறைப்பாட்டைக் கூறியுள்ளார்.

நளினியிடம் இருந்து செல்போன் கைப்பற்றப்பட்டது என்று சில நாள்களுக்கு முன் இந்திய அரசாங்கம் குற்றச்சாட்டை சுமத்தியதை நளினி தரப்பினர் மறுத்துள்ளனர்.

சிறையில் கஞ்சா உட்பட தடை செய்யப்பட்ட பொருள்கள் உலாவுவதாகவும் அதைத் தடுக்க வேண்டிய சிறை நிர்வாகம் நளினி மீதே இதுபோன்ற பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்தியதாகவும் தகவல்கள் வெளியாகின.

இந் நிலையில் ஏப்ரல் 28 மற்றும் 30 ஆம் திகதிகளில் சிறைத்துறை ஜி.ஜிக்கு நளினி இரண்டு

(18 ஆம் பக்கம் பார்க்க)



இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜனநாயகத் தேசிய முன்னணியின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுக் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டபோது பொதுமக்களை நோக்கிக் கை அசைப்பதைப் படத்தில் காணலாம்.

## புலிகளின் மற்றொரு வடிவமே நோர்வேயில் இயங்கும் ஜீ.ரீ.எப்.

### சிங்கப்பூர் விரிவுரையாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

நோர்வேயில் இயங்கி வரும் ஜீ.ரீ.எப். அமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் மாற்று வடிவமேயாகும் எனச் சிங்கப்பூரின் நாங்யாங் பல்கலைக்கழக சர்வதேச விவகார மற்றும் பயங்கரவாத விரிவுரையாளர் றொகான் குணரட்ண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நெடியவன் தலைமையில் இயங்கி வரும் க்ளோபல் தமிழ் போரம் என்ற அமைப்பு மிகவும் ஆபத்தானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு கடந்த தமிழீழ ராஜ்ஜியத்தை உருவாக்க முனைப்புக் காட்டி வரும் உருத்திர குமாரனை விடவும் நெடியவன் ஆபத்தானவர் என அவர் கூறியுள்ளார்.

உருத்திரகுமாரன் இலங்கை அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய அரசியல் சாணக்கியத்தைக் கொண்டவர்.

எனவே நெடியவனின் ஜீ.ரீ.எப். அமைப்பின் நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாடு கடந்த தமிழீழ ராஜ்ஜிய உருவாக்கத்திற்கு ஆதரவாக வாக்களித்த 90 வீதமானவர்கள் இலங்

(18 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

பிரபல ஆசிரியர் தயாரித்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

மாதிரிப் பரீட்சை II

வினாத்தாள் II

## யாழ்.மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்புப் போராட்டம் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவந்த நீதிமன்ற பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டு சட்டத்தரணிகள் இன்று கடமைக்குத் திரும்புவார்கள் என யாழ்ப்பாண மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று கூடி சங்கத்தின் கூட்டத்தில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக யாழ். மேல் நீதிமன்ற சட்டத் தரணிகள் சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

கடந்த 04.05.2010 கூடிய மேற்படி சட்டத்தரணிகள் சங்கம் அன்று நிலவிய சூழ் நிலையை நீண்டநேரம் பரிசீலனைக்கு எடுத்து சாவகச்சேரி நீதவானுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலைக் கவனத்தில் கொண்டு இதற்கான கண்டனத்தை

(18 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாட்டின் கீழேயே பொன்சேகாவை வைத்திருக்க உத்தரவு

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாட்டில் கடற்படைத் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை இராணுவக் கட்டுப்பாட்டிலேயே மேலதிக பாதுகாப்புடன் தொடர்ந்தும் தடுத்து வைக்குமாறு கொழும்புக் கோட்டை பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

இறுதிக் கட்ட மோதல் நடத்தப்பட்டபோது வெள்ளைக் கொடி ஏந்தி வந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளுமாறு பாதுகாப்புச் செயலர் உத்தரவிட்டதாகக் கூறப்படும் விடயம் தொடர்பில் ஜெனரல் சரத் பொன்சேகா ஊடகம் ஒன்றுக்கு தகவல் வெளியிட்டிருந்தார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## உடற்பயிற்சிப் போட்டிகள் நடைபெறும் திகதி மாற்றம்

(கரவெட்டி)

வடமராட்சி கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 19ஆம் திகதி புதன் கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என வடமராட்சி கல்வி வலய உடற்கல்விப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.செல்வக்குமரன் அறிவித்துள்ளார்.

இப் போட்டிகள் நாளை மறுதினம் 15ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதற்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-24)

## யாழ். மாநகரசபையின் கூட்டங்கள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் துணைமேயர் றீகன் கைது செய்யப்பட்டுள்ளமையைக் கண்டித்து யாழ். மாநகரசபையின் மாதாந்த பொதுக் கூட்டங்களை மறு அறிவித்தல் வரை நடத்தப் போவதில்லை என மாநகர முதல்வர் யோகேஸ் வரி பற்குணராஜா நேற்று அறிவித்திருக்கின்றார்.

இதன் பிரகாரம் மாநகர சபையின் துணை மேயரான றீகன் விடுவிக்கப்படும் வரை மாநகர சபையின் மாதாந்த பொதுக் கூட்டங்களை தாங்கள் நடத்தப் போவதில்லை எனவும் இது தொடர்பில் எதிர்க் கட்சிகள் தமக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5,7,30)

## புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலய தரம் 5 மாணவர்களுக்கு வாரந்தோறும் பயிற்சிப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றது.

வலய நிலைப்பரீட்சையின் ஐந்தாம் தொடர் நாளை 14ஆம் திகதி வெள்ளிக் கிழமையும், மாகாண நிலைப் பரீட்சையின் 2ஆம் தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும் வலயநிலை பரீட்சையும் வட மாகாணப் பரீட்சையும் வாரந்தோறும் நடத்தத்திட்டமிடப் பட்டுள்ளது. வினாத்தாள் பொதிகள் பரீட்சைத் தினத் தன்று வலயக்கல்விப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாமென ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா அறிவித்துள்ளார். (ச)

## மாணவன் கடத்தல் விவகாரம் பெண் ஒருவர் விளக்க மறியலில்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியின் விடத்தல்பளையில் 14 வயதுடைய பாடசாலை மாணவனை அழைத்துச் சென்ற சம்பவம் தொடர்பாக அதேபகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் நேற்று கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். தெற்படியைச் சேர்ந்த இன்பராஜா தர்சினி எனும் பெண்ணே கைது செய்யப்பட்டு எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-1)



## வாழ்த்துகிறோம்

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சராக பதவியேற்று யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்த *கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா* அவர்களை வருக! வருக!! என்று வரவேற்று வெற்றிமாலை பல அணிவித்து வரவேற்றோம்.


யாழ்/முனீஸ்வரன் வீதி, அங்காடி வியாபாரிகள்

(1346)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்ந்த மலராக
1982. 08 .30

கருகிய பூவாக
2010. 04. 13



புன்னகை பூத்த உன் முகம் எங்கே
புத்தாடை புனைந்த உன் உடல் எங்கே
கள்ளங் கபடம் இல்லா உன் கதை எங்கே
கனிவான உன் பேச்செங்கே

அக்கினித்தாயின் மடியினிலே-அம்மா
நீயும் தவழ்ந்தாயே
அருகில் இருந்து பார்த்த நிலையம்மா
நாமும் மறப்போமா.

### அமரர்
# பிரபாகரன் பிறேமலோஜினி

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து உடன் வந்து உதவிகள் பல நல்கி அஞ்சலி செய்தும் எமக்கு ஆறுதல் கூறியும் தேற்றிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (13.05.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள எமது குடும்ப தலைவியின் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதோடு அதனை தொடர்ந்து இடம்பெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

-குடும்பத்தினர்.

(சி-253)

## CARITAS- HUDEC- JAFFNA
## EMPLOYMENT OPPORTUNITIES

CARITAS HUDEC

POSITIONS:-
1. ACCOUNTANT
2. LVH PROGRAMME COORDINATOR
3. TECHNICAL OFFICER
4. LVH FIELD OFFICER
5. FINANCE ASSISTANT
6. DATA ENTRY OPERATOR

- Duty Station:- Vanni area
- Duration of Contract:- 9 months

1. Main Duties:- **Accountant**
   - Establish proper accounting systems.
   - Preparation of payment vouchers payments.
   - Preparation of budget as required in coordination with programme units.
   - Preparation of monthly payroll.
   - Coordination with banks and transaction.

   *Qualification/ Experience*
   - Should be partly qualified ICASL/CIMA/ACCA or completed HNDA
   - Minimum 03 years professional financial experience
   - Fluency in written and spoken English
   - Computer literacy in MS. Office (Word, Excel, Access)

2. *Main Duties:- **LVH Programme Coordinator***
   - Plan and finalize the various LVH project components. Take into consideration the policy of the local authorities.
   - Regularly check the time planning of the field officers with the implementation.
   - Supervise and manage field and project officers in identifying projects through a participatory process which include diverse group of individuals and vulnerable groups.

   *Qualification/ Experience*
   - Demonstrated management experience with a special emphasis on project management
   - Able to write project proposals and prepare monthly, quarterly, half and yearly reports
   - Fluency in written and spoken English
   - Good communication and managerial skill
   - Computer literacy in MS. Office (Word, Excel, Access)

3. *Main Duties:- **Technical Officer***
   - Supervision of all construction activities, report on progress and bottlenecks, receive information from beneficiaries and give regular information to project participants and local authorities as and when required. Also submit report to Director through construction manager
   - Be required to realize site supervision

   *Qualification/ Experience*
   - NCT/ NDT in Civil Engineering or equivalent with 2 years experience in the same field.
   - Fluency in written and spoken English
   - Computer literacy in Ms. Office and AutoCAD
   - Experience in preparing weekly and monthly progress reports.
   - Able to make BoQ and other quantity analyses of materials and supplies

4. *Main Duties:- **LVH Field Officer***
   - The LVH field Officer responsible for daily implementation of LVH activities covered in the program, this includes IGP, Animal Husbandry, Vocational training etc. under the direct supervision of the Livelihood Coordinator
   - Organize and conduct training programme to the beneficiaries to enhance standard of their life.
   - Assist in making project proposals, reporting & analysis.

   *Qualification/ Experience*
   - Completion of Secondary Education preferably with relevant Diploma
   - Two years experience relevant field.
   - Fluency in written and spoken English
   - Computer literacy in MS. Office (Word, Excel, Access)

5. *Main Duties:- **Finance Assistant***
   - Set up and maintain efficient finance systems to support Program Activities
   - Assist in all finance implementation activities and inform the Accountant of all the progress of the undertaken activities.
   - Preparing and entering TALLY software ledger books.
   - Assist to collect the entire document needed to establish the monthly reports
   - Prepare monthly financial reports

   *Qualification/ Experience*
   - Should be partly qualified CIMA, HNDA or equivalent degree with minimum 02 years experience preferably in a NGO.
   - Fluency in written and spoken English
   - Computer literacy (MS. Office and Tally Accounting Package)

6. *Main Duties:- **Data Entry Operator***
   - Should be able to prepare narrative and statistical reports independently
   - Knowledge on the maintenance of the Database and Documents

   *Qualification/ Experience*
   - Should have Secretariat/ Administrative background
   - Completed G.C. A/L and minimum "credit pass" in G.C. O/L English
   - Advanced computer skills in Excel (Spreadsheet, Database management), Word (reporting, graphs) & Internet e-mail

**General**

Caritas- Hudec recruits for its programme qualified persons without distinction of ethnic, background, religion or gender.
Women candidates are encouraged to apply.
If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV with introduction letter, including your contact details **(address and telephone)** and minimal two non related references to the one of the following address, latest by : **21st May 2010 (Friday).**

The Director
Caritas- HUDEC
14, Mathew's Road,
Deogu Street,
Jaffna.

or E- mail: hudec@sltnet.lk

The Director
Caritas- HUDEC
Thirunagar,
Kilinochchi.

or catitasvanni09@gmail.com

(ச-252)

## இன்று ஒரு தகவல்

# ஆகிரி ராகம்

ஒருநாள் நாரதர் ஒரு பாட்டுப் பாடிக் கொண்டே வந்தார். நாரதர் என்றால் ஏதாவது சிக்கலை உண்டு பண்ணுவது தானே வழக்கம்? அவர் ஏன் பாட்டுப் பாடிக் கொண்டு வந்தார் என்று கேட்பீர்களா?

பொறுமையாகக் கேளுங்கள். இதிலும் ஒரு சிக்கல் வருகிறது. பொதுவாக நாரதர் மற்றவர்களைத் தான் சிக்கலில் மாட்டி விடுவதுவழக்கம். இந்த விடயத்தில் அவரே ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டார். அதன் பின் ஒரு வழியாகத் தப்பித்து வந்தார். அந்தக் கதையைக் கேளுங்கள். நாரதர் பாடிக் கொண்டு வந்தார் என்று சொன்னேன் அல்லவா? அவர் ஆகிரி ராகத்தில் அந்தப் பாட்டை பாடிக் கொண்டு வந்தார். இந்த ராகத்தை நாம் சரியாகத்தான் பாடுகிறோமா? என்று சந்தேகம் அவருக்கு!

உடனே சரஸ்வதியிடம் போய் கேட்டார்.

அதற்கு சரஸ்வதிதேவி, "நீ பாடுவது சரியா, இல்லையா என்பதை ஆஞ்சநேயரிடம் போய்க் கேட்டுத் தெரிந்து கொள்" என்று சொன்னார்.

நாரதருக்கு என்னமோ மாதிரி ஆகிவிட்டது. நாம எங்கே... ஆஞ்சநேயர் எங்கே... அவரிடம் போய் கேட்டுத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு நிலைமை ஆகிவிட்டதே... என்று நினைத்தார். இருந்தாலும் சரஸ்வதி சொன்ன பின் சும்மா இருக்க முடியுமா!

நேராக ஆஞ்சநேயரிடம் போனார். பாடிக் காட்டினார். இது சரியா என்று கேட்டார்.

ஆஞ்சநேயர் நாரதரை அழைத்துக் கொண்டு போய் ஒரு மலையில் நிறுத்தினார். "இப்ப பாடு... அது சரியா இருந்தால் இந்த மலை உருக வேண்டும்" என்றார்.

நாரதர் பாடினார். மலை உருகவில்லை!

"சரி, இப்ப நான் பாடுகிறேன். பார்..." என்று சொல்லிவிட்டு ஆஞ்சநேயர் பாடினார். மலை உருக ஆரம்பித்தது.

"நான் நின்று கொண்டிருக்கும் மலை உருகுகிறதே! என்று சத்தம் போட்டார் நாரதர். ஆஞ்சநேயர் பாதியில் பாட்டை நிறுத்தினார். உடனே உருகுவது நின்று விட்டது. உருகிய மலை உறைய ஆரம்பித்தது.

நாரதரின் கால் பாறையில் மாட்டிக் கொண்டது. எடுக்க முடியவில்லை. ஆஞ்சநேயர் மறுபடியும் பாடி நாரதரைக் காப்பாற்றினார். நாரதர் தப்பினோம் பிழைத்தோம் என்று எட்டத்தில் வந்து நின்று கொண்டார். அவருடைய கோபம் குறையவில்லை. அதனால் ஒரு சாபம் கொடுத்து விட்டார். எப்படித் தெரியுமா?

"இந்த ஆகிரி ராகத்தை யார் பாடினாலும் அவருக்கு சோறு கிடைக்கக் கூடாது" என்று.

அதனால் இந்த ராகத்தை இப்பவும் பாடுவதற்கு பயப்படுபவர்கள் உண்டு.

ஒரு சங்கீத வித்துவான் இதைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று புறப்பட்டார். தயிர் சாதத்தைக் கட்டி எடுத்துக் கொண்டு ஒரு மூங்கில் காட்டுக்குப் போனார்.

வளைந்திருந்த ஒரு மூங்கிலில் சோற்றுப் பார்சலை கட்டினார். கீழே உட்கார்ந்து ஆகிரி ராகம் பாட ஆரம்பித்தார்.

பாடி முடித்ததும் கண்ணைத் திறந்து பார்த்தார். சோற்றுப் பார்சலைக் காணவில்லை.

என்ன ஆச்சு தெரியுமா? சூரிய ஒளி படப்பட மூங்கில் நிமிர்ந்து விட்டது. சோறு கைக்கெட்டாத தூரத்திற்குப் போய் விட்டது.

பசி வயிற்றைக் கிள்ளுகிறது என்ன செய்வது என்று யோசித்தார். ஒரு பெரிய செல்வந்தரின் வீட்டுக்குப் போனார். பசிக்கிறது என்றார்.

உடனே இவரை உட்கார வைத்து இலை போட்டார்கள். சோறு வைத்தார்கள். பசியோடு அதைப் பார்த்ததும் இவருக்குச் சந்தோஷம்.

''ஆகிரியால் இனி எதுவும் செய்ய முடியாது!'' என்று சொல்லி சோற்றைக் கையிலெடுத்தார்.

அதற்குள் இரண்டு பேர் வந்து அவரை இழுத்துக் கொண்டு போய் வெளியே தள்ளி விட்டார்களாம்.

என்ன விடயம் தெரியுமா? அந்த செல்வந்தரின் மனைவியின் பெயர் ஆகிரியாம்.

ஆகிரி ராகம் பாடினால் சோறு கிடைக்காது என்பதற்கு இப்படியெல்லாம் கதைகள் உண்டு.

அது உண்மை என்ற நினைப்பில் பாடுவதற்குப் பயப் படுகிறவர்களும் உண்டு.

ஆகிரி ராகத்தை வைகறைப் பொழுதில் சுத்தமாக... வேற ஸ்வரம் எதுவும் கலக்காமல் பாடினால் சோறு கிடைக்காது என்பது நம்பிக்கை அவ்வளவுதான்.

இவ்வளவெல்லாம் இருந்தும் எனக்குத் தெரிந்த ஒரு சங்கீத வித்துவான் தினமும் ஆகிரி ராகம் பாடிக் கொண்டே இருப்பார். அதுவும் வீட்டுக்குள்ளேயேஅதிகாலை நேரத்தில் பாடுவார்.

அவரை ஒருநாள் பார்த்தேன்.

"உங்களுக்கு ரொம்பவும் தைரியம் தான் சேர்" என்றேன்.

"ஏன் அப்படிச் சொல்றீங்க?" என்றான்.

''ஆகிரி ராகத்தை அவ்வளவு துணிச்சலாக உங்கள் வீட்டிலேயே பாடுகிறீர்களே? என்றேன்.

அவர் பரிதாபமாக நிமிர்ந்து பார்த்தார்.

"அப்படி இல்லை சேர்! நான் எந்த ராகம் பாடினாலும் எங்க வீட்டிலே சோறு கிடைக்காது சேர்! அதனால் தான் தைரியமாக அந்த ராகத்தைப் பாடுகிறேன்" என்றான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

---

அரசியல் சாசனத் திருத்தத்தில்

# அரசியல் சாசன சபையை நியமிக்கும் நடைமுறை இரத்துச் செய்யப்படும்?

(கொழும்பு)

எதிர்வரும் ஜுன் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசியல் சாசனத் திருத்தத்தின் மூலம் அரசியல் சாசன சபையை நியமிக்கும் நடைமுறை இரத்துச் செய்யப்படும் என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியல் சாசன சபை 17 ஆவது அரசியல் திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. அரசாங்கத்தின் உயர் பதவிகள் மாத்திரமல்லாது சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான பொருத்தமான நபர்களை நியமிக்கும் அதிகாரமும் அரசியல் சாசன சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

அரசியல் சாசன சபைக்கான உறுப்பினர்கள், சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளினால் பரிந்துரைக்கப்படுவார்கள். இந்த சபைக்கான உறுப்பினர்களை நியமிப்பதில் கட்சிகளுக்கிடையில் இணக்கத்தை ஏற்படுத்த முடியாததன் காரணமாக சில வருடங்களாக அரசியல் சாசன சபை செயலிழந்து காணப்பட்டது.

இந்த நிலையில் புதிய அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அரசியல் சாசன சபைக்கான உறுப்பினர்களை நியமிக்கும் பொறுப்பு ஜனாதிபதி, சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் இணைந்து நியமிக்கும் வகையில் திருத்தங்கள் முன்வைக்கப்படவுள் ளதாக அறிய முடிகிறது. (6-4)

---

# மத்திய வங்கி ஊழியர் சேமலாப நிதிப்பிரிவின் நடமாடும் சேவை

இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேமலாநிதிப்பிரிவின் இரு நாள் நடமாடும் சேவை எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ். உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தொழில் திணைக்களத்தின் அனுசரணையுடன் இடம் பெறவுள்ள இந்த நடமாடும் சேவையில் முதலாம் நாள் அமர்வில் ஊழியர் சேமலாப நிதி பிரச்சினை தொடர்பாகவும் அதனை எப்படித் தீர்த்தல் என்பது பற்றியும் ஊழியர் சேமலாப நிதியில் இலத்திரனியல் உபகரண பிரயோகம் பற்றியும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் யாழ். மாவட்ட தனியார்துறைதொழில் தருநர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

இதில் இரண்டாம் நாள் அமர்வின் போது ஊழியர்சேமலாப சம்பந்தமான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த இரண்டு தினங்களும் நடைபெறவுள்ளநடமாடும்சேவைக்கு யாழ். குடாநாட்டில் உள்ள 10 ஊழியர்களுக்கு மேல் பணியாற்றும் நிறுவனங்களின் தொழில் தருநர் அல்லது பிரதிநிதியும் கணனி அறிவுடைய இன்னொரு உத்தியோகத்தருமாக இருவர் அழைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை இரண்டாம் நாள் நடமாடும் சேவையில் மத்திய வங்கி பதிவேடுகளில் பெயர், அடையாள அட்டை இலக்கம் , ஊழியர் சேமலாப நிதி இலக்கம் முதலியவற்றில் வேறுபாடு உடையவர்களும் மத் திய வங்கி சம்பந்தமான ஏனைய பிரச் சினைகளை உடைய ஊழியர் சேம லாப நிதி அங்கத்தவர்களும் அழைக்கப் பட்டுள்ளனர். பிரச்சினை தீர்க்க வரும் ஊழியர் சேமலாப நிதி அங் கத்தவர்கள் உரிய தொழில் தருநர்களின் உறுதிப் படுத்திய கடி தங்க ளும் வேறு பொருத்தமான ஆவணங் களினையும் சமர்ப்பித்து உரிய திருத் தங்களை மேற் கொள்ள முடியும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (6-4)



சுன்னாகம் மக்கள் வங்கியில் திருமதி கஸ்தூரி பீஷ்மன் தலைமையில் நடைபெற்ற தமிழ்புத்தாண்டு விழாவும் வனிதா வாசன சீட்டிழுப்பும் நிகழ்வில் சுன்னாகம் பிரதேசசபை செயலர் திருமதி சுலோச்சனா முருகேசன் சிறப்புரையாற்றுவதையும் மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் சுஆனந்தராசா, சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் மா. சந்திரகாந்தன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

---

## இராசி பலன்

13-05-2010

(சித்திரை 30. வியாழக்கிழமை)

சதுர்த்தசி முற்பகல் 7.34 மணிவரை

பரணி பின்னிரவு 2.47 மணிவரை

இராகுகாலம் 11.24-2.54 மணிவரை

சுபநேரம் 7.24-8.54 மணிவரை

திருநெல்வேலி பத்திரகாளி கொடி, மாதகல் அரசடி சித்திவிநாகர் கொடி, வல்லிபுரக் குறிச்சி மருதடி தான்தோன்றீஸ்வரர் கொடி, கெருடாவில் வீரகாளியம்மை கொடி, சிறுத்தொண்டர் குருபூசை, சித்திரைப் பரணி , அமாவாசை விரதம்.


| | |
|---|---|
| மேடம் | கற்பனை மிகுதி, விருந்துபசாரம், தன்னம்பிக்கை, நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு, மனஸ்தாபம், உறவினர் வருகை. |
| மிதுனம் | சுப காரியம், குடும்ப மகிழ்ச்சி, பொருள்சேர்க்கை, விருந்துபசாரம். |
| கடகம் | தொழில் மேன்மை, உற்சாகம், முயற்சி கைகூடும், நண்பர்கள் உதவி. |
| சிங்கம் | புதிய திட்டமிடல், இடமாற்றம், பித்தரோகம், எதிர்பாராத செலவு. |
| கன்னி | அபகீர்த்தி, எடுத்த காரியம் தாமதமாகும், போசன நன்மை, வாகனபயம். |
| துலாம் | உறவினர் வருகை, காரிய அனுகூலம், பாராட்டு , உற்சாகம். |
| விருச்சிகம் | எதிர்பாராத் நன்மை, தேகநலன், நல்லசெய்தி, போசனசுகம். |
| தனுசு | கௌரவக் குறைவு, வேலைச் சுமை, முயற்சி தாமதம், தன விரயம். |
| மகரம் | மனச் சோர்வு, தொழில்சிந்தை, சுபசெலவு, நண்பர்கள் சந்திப்பு. |
| கும்பம் | இனிய சம்பவம், காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, கூட்டு முயற்சி. |
| மீனம் | காரிய தாமதம், மனச்சஞ்சலம், பணவிரயம், போசனசுகம். |


வளவன்

---

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 80 |
| தக்காளி | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 |
| கோவா | 50 | 60 |
| கரட் | 120 | 140 |
| பூசணி | 40 | 50 |
| புடோல் | 50 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 |
| பாகற்காய் | 120 | 140 |
| வெண்டிக்காய் | 50 | 60 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 |
| பயிற்றங்காய் | 40 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 |
| பீற்றூட் | 50 | 60 |
| கறிமிளகாய் | 120 | 140 |
| முருங்கைக்காய் | 150 | 200 |
| போஞ்சி | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 30 |
| தேசிக்காய் | 40 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 |






யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் உள்ள யு.என்.ஐ.ஐசிரி கம்பஸ் கணனி நிறுவனத்தில் யாழ். மாணவர்களுக்கான வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவது தொடர்பான வழிகாட்டல் செயலமர்வில் நிறுவனத்தின் வெளிநாட்டுப் பிரதிநிதிகளான ஐரோப்பிய கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் தலைவர் பிம்விஸ் , லண்டன் நொட்டிங்கம் கல்லூரியின் தலைவர் எஸ்.பி.கரன் ஆகியோருடன் நிறுவன இயக்குநர் செ.செல்வதாசன் கலந்துரையாடுவதையும், வெளிநாட்டு பிரதிநிதி பிம்விஸ் மாணவன் ஒருவனுக்கு விளக்கமளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-விஜயகாந்தன்)

# யாழ்ப்பாணத்திலிருந்து இம்மாதம் 20ஆம் திகதி முதல் கடுகதி சிற்றூர்திச் சேவை ஆரம்பம்

## யாழ்.மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினால் யாழ்ப்பாணத்திலிருந்து குறிப்பிட்டசில இடங்களுக்கென பரீட்சார்த்தமான கடுகதி பஸ்சேவை ஒன்று இம்மாதம் 20ஆம் திகதி முதல்ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். மோட்டார் போக்குவரத்து உதவிஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவு, பருத்தித்துறை ,கொடிகாமம், காரைநகர், மாதகல், குறிகாட்டுவான், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களுக்கே மக்கள் நலன் கருதி இச்சேவை நடைபெறவுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் வழியனுமதி பெற்ற தனியார் சிற்றூர்திகள் சேவையிலீடுபடுத்தப்படுமெனவும் இதில் பிரயாணி பயணிக்கும் போது தூரத்திற்கேற்ப வழமையாக அறவிடப்படும் கட்டணத்திலும் மேலதிகமாக ரூபா 10 இனை செலுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

குறிக்கப்பட்ட அந்தந்த பஸ்தரிப்பு நிலையத்தில் நிறுத்தப்படும் இச் சிற்றூர்தியில் காணப்படும் இருக்கைகளின் அளவுக்கேற்ப பயணிகள் ஏற்றிச் செல்லப்படுபவரெனவும் மேலதிகமாக பிரயாணிகள் பயணிப்பது கண்டுபிடிக்கப்பட்டால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கேற்ப கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சேவை மூலம் அவசரமாக செல்வோர், நோயாளர்கள்,வயோதிபர்கள் போன்ற பலர் நன்மையடையவிருப்பதுடன் தொடர்ந்து இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பின்னரே தீர்மானிக்கப்படும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவரும் அரச அதிபருமான கே.கணேஸுக்கும் தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்க நிர்வாகத்தினருக்கும் இடையில் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் வழமையான சிற்றூர்தியில் அளவுக்கதிகமான பயணிகளை மிதிபலகையில் ஏற்றியும் ரிக்கற் இன்றி சேவையிலீடுபடும் சிற்றூர்தியும் பயணியும் கண்டுபிடிக்கப்படுமானால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதுகுறித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கண்காணித்து வருவதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (6-30)

## க.பொ.த (சா/த) கணித பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் க.பொ.த (சா/த) வகுப்பிற்கு கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தரம் 11 இல் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறும் செயலமர்வுக்கு வருகைதரும் போது தங்கள் பாடசாலையில் தற்போது தரம் 11 இல் கற்கும் இடம்பெயர்ந்த மாணவர்களின் பெயர் விபரங்களை கொண்டுவருமாறும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-19)

## வடமராட்சி வலயக் கல்வி பணிமனை இடமாற்றம்

(அல்வாய்)

வடமராட்சி வலயக் கல்விப் பணிமனை 1999 ஆம் ஆண்டு முதல் யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் உள்ள கட்டடத்தில் இயங்கிவந்தது.

அண்மையில் வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின் கீழ் பருத்தித்துறை முதலாம் கட்டை ஒழுங்கையில் அமைந்துள்ள புதிய கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அங்கு நிதிக்கிளை, கல்வி நிர்வாகம் , கல்வி அபிவிருத்தி, திட்டமிடல் பிரிவு, கட்டடப் பகுதி ஆகியன இயங்கிவருகின்றன. அதே போல் பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிமனை, புலோலி மெ.மி.த.க. பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது. (4-19)

## கெயர் நிறுவனத்தினால் உழவியந்திரம் அன்பளிப்பு

(நல்லூர்)

கெயர் நிறுவனத்தினால் வாதரவத்தை பெரிய பொக்கனை கணேஸ்வரன் சனசமூக நிலையத்திற்கு புதிய உழவியந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பெரிய பொக்கனை பகுதியிலுள்ள மாணவர்களை பாடசாலைக்கு ஏற்றிச் செல்வதற்காகவே இவ் வாகனம் வழங்கப்பட்டது. இவ்வளவு காலமும் மாணவர்கள் மூன்று கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றே பாடசாலை சென்று வந்தனர்.

இவ் வாகனம் வழங்கப்பட்ட தையடுத்து அப்பகுதி மாணவர்களின் பெற் றோர் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (6-134)




## அபிவிருத்திக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 25 கிராம அலுவலர் பிரிவினையும் உள்ளடக்கியதாக நெல்சிப் திட்டத்தின் கீழ் புதிய முன்மொழிவுகள் திரட்டப்படவுள்ளது.

இத்திட்டங்களை பெறுவதற்கான அவசர அபிவிருத்திக்கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ள சனசமூக நிலையங்கள், பொதுஅமைப்புக்கள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் ஆலோசனை சபை பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி கேட்டுள்ளார். (4)

## யாழ்.மாவட்ட மத்தியஸ்த சபைகள் தொடர்பான கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட மத்தியஸ்த சபைகள் தொடர்பான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் 4.30 மணிவரை யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், அறிமுகவுரையை நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி கமலினி டி.சில்வா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவின் பொறுப்புக்கள் தொடர்பான விளக்கத்தை மத்தியஸ்தசபை ஆணைக்குழுவின் பதில் செயலாளரும் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் உதவிச் செயலாளருமான ஏ.கே.டி.டி.டி.அறந்தர வழங்கவுள்ளார்.

அத்துடன் மத்தியஸ்தர்சபை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் ஆலோசகர் எம்.திருநாவுக்கரசு கருத்துரை வழங்குவார்.

சிறப்புரைகளை மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவின் ஆணையாளரும் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியுமான நிமல் திஸ்ஸநாயக்க, மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவின் ஆணையாளர் எம். சோமசுந்தரம், யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.எம்.ஜி.பி. அமரகோன் , யாழ். மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (6-4)

## சட்டவிரோதமாக மதுபானம் தயாரித்தவருக்கு 3 மாத சிறைத்தண்டனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் சட்டவிரோதமான முறையில் மதுபானத் தயாரிப்பில் ஈடுபட்ட ஒருவருக்கு 3 மாத கடூழியச் சிறைத் தண்டனையும் 25000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

அபராதப் பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலதிகமாக ஒரு வருட சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது.

இது தொடர்பான விசாரணை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (6)

## இரத்ததான நிகழ்வு

(நல்லூர்)

சர்வதேச செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலிகிழக்கு கோப்பாய் பிரிவில் நிகழ்ந்த இரத்ததான நிகழ்வில் இலங்கைச் செஞ்சி லுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவுத் தொண் டர்கள் பதினைந்து பேரும் சங்கானைப் பிரிவுத் தொண்டர்கள் மூன்றுபேரும் இரத்ததானம் வழங்கியுள்ளார்கள்.

இவ் இரத்ததான நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை இரத்தவங்கி பொறுப்பதிகாரி டாக்டர் கி.சிவசங்கர் தலைமையிலான குழு இரத்தம் சேகரிப்பில் ஈடுபட்டனர். (4-134)

## கலாபூஷண விருதிற்கான விண்ணப்பங் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாபூஷண விருதிற்கு சிற்பம்,ஓவியம், நடனம்,வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், நாட்டுப் புறவியல்,சினிமா, இலக்கியம், நாட்டுக் கூத்து, ஊடகத்துறை போன்ற துறைகளில் சிறப்புச் சேவையாற்றிய அறுபது வயதைப் பூர்த்தி செய்த சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தினை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் லோகநாயகம் அறிவித்துள்ளார். (6-4)

# வாழும் கலை அற நிறுவனத்தை ஸ்தாபித்து

# ஆன்மீக தொண்டாற்றி வரும் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி

விஞ்ஞானம் மேற்செல்ல முடியாத இடத்தில் மெய்ஞ்ஞானம் உதவிக்கரம் நீட்டுகிறது. நம் மூச்சில் அறிவியல் ரீதியான ரகசியங்களை உலகிற்கு உணர்த்திய ஆன்மீக விஞ்ஞானி பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்கள்.

சர்வதேச வாழும் கலை அற நிறுவனத்தை ஸ்தாபித்து உலகம் முழுவதும் பயணம் செய்து ஆன்மீக வளர்ச்சி மகிழ்ச்சி தொண்டு செய்தால் நமது குறிக்கோள் என்றும் அன்பு நமக்கு கிடைத்தற்குரிய சிறந்த பரிசு என்றும் ஒவ்வொரு மனிதனும் தன்னை தான் உணர்ந்து அன்பில் மலரும் தத்துவத்தை உணர்த்தி வருகிறார்.


**இன்று பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் 54 ஆவது பிறந்த தினமாகும்.**

1150 நாடுகள் மேல் தனது ஆன்மீக சேவையை விஸ்தரித்துள்ள சர்வதேச வாழும் கலை நிறுவனமானது பல்வேறு பட்ட சேவைகள், பயிற்சி திட்டங்கள் மூலம் உலக மக்களின் வாழ்வில் ஒளியூட்டி வழிகாட்டுகிறது.

மக்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த தியானத்திற்கு மேலாக ஏதோ ஒன்று தேவை, என உணர்ந்த குருஜி அவர்கள் தொடர்ந்து சில நாட்கள் மௌத்துடன் கூடிய தியானத்தில் இருந்த போது அவருள்ளிருந்து சுதர்சனக்கிரியா எனும் அரிய பொக்கிஷம் மலர்ந்தது.

சுதர்சனக்கிரியா எனும் இந்த அற்புதமான மூச்சு பயிற்சியை உலக மக்கள் அனைவரும் பெற்று உடல் மன உபாதைகளில் இருந்து விடுபட்டு நிகழும் காலத்தில் மகிழ்வுடன் வாழும் வகையில் பல்வேறு வயதினர்க்குமான தியானம், யோகா, ஞானம், மூச்சு பயிற்சி என்பவற்றை உள்ளடக்கி கடைந்தெடுத்து அமுதமாக வடிவமைத்து தந்துள்ளார் குருஜிஅவர்கள்.

சுதர்சனக் கிரியா ஒரு செயல் முறை ஞானமாகவும் ஒரு நேரடி அனுபவப் பயிற்சியாகவும் வழங்கப்படுகிறது. உடல், மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு உடலில் உயிரணுக்களுக்கு பிராண வாயுவை வழங்கி புது வாழ்வு கொடுத்து எதிர்மறையான எண் ணங்களை மனதிலிருந்து எளிதாக களைந்து வெளியேற்றி மன இறுக்கம், விரக்தி, ஏமாற்றம், மனச்சோர்வு, சோம்பல் நீக்கி , உலகத்தையும் உறவுகளையும் நம்மை பற்றியும் ஒரு தெளிவானகாட்சியுடன் மனம் அமைதியாகஒரு நிலைப்பட வைக்கிறது.



இந்திய அறிவியல் மருத்துவகழகங்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியில் சுதர்சனக் கிரியாவினால் இரத்தஅழுத்தம், இதய நோய்கள், வயிற்று புண், ஆஸ்மா, நீரிழிவு, சிறுநீரக நோய்கள், உளவியல்நோய்களின் தாக்குங் களில் இருந்து மேம்பாடு அடைவதாகவும்புற்றுநோய், எயிட்ஸ்நோயாளிகளில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனமானது (WHO) 156 வித மான மன நல வியாதிகளுக்கு சுதர்சனக் கிரியா அரிய மருந்தாக அமைவதாக சான்று வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

வாழும் கலை அற நிறுவனம்

# ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமர்ந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொட ரில் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி பூசை முடிவுற்றதும் கம்பராமாயணம் காட்டும் *மானிட விழு மியம்* என்னும்விடயம்பற்றி செஞ்சொற்செம்மல் இரா.கேதீசன் சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)

# சோதனை சாவடிகள் அகற்றம்

பருத்தித்துறை -கொடிகாமம் வீதியில் நீண்ட பல வருடங்களாக இருந்து வந்த சிறிய சோதனைக் சாவடிகள் நீக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக அவ்வீதியில் காணப்பட்ட பல சிறிய சோதனைச் சாவடிகளை படையினர் அகற்றி வருகின்றனர்.

அதேவேளை தென்மராட்சியில் படையினரும் பொதுமக்களும் இணைந்து பல விளையாட்டுப் போட்டிகளையும் கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தி வருகின்றனர். கொடிகாமம், வரணி கெற்பலி போன்ற இடங்களில் சைக்கிளோட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி என்பனவும் இடம் பெற்று வருகின்றது. (6-10)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பாரிய மறுசீரமைப்பு நடவடிக்கை

## கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பாரிய மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மிக வலுவானதும் மிகப் பெரிய கட்சியுமாக தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி விளங்குவதாகவும் பாராளுமன்றத்தில் 123 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் ஏனைய கூட்டணி கட்சிகளுடன் மிகவும் நட்புறவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இயங்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி மீளமைப்பு பணிகளில் ஓர் அங்கமாக அடுத்த 12 மாதங்களுக்குள் ஒரு இலட்சம் புதிய அங்கத்தினரை கட்சியில் இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (6-4)

# போலி நாணயத்தாள்களுடன் இரு இளைஞர்கள் கைது

(கொழும்பு)

போலி இரண்டாயிரம் ரூபா நாணயத்தாள்கள் இரண்டுடன் அநுராதபுரம் நகரில் இரு இளைஞர்களை கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை கைது செய்துள்ளதாக அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலைய விசேட சுற்றிவளைப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் அலோசியஸ் தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்குத் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் அநுராதபுரம் நகரிலுள்ள தொழில்நுட்ப வேலைத் தளமொன்றில் வைத்து இவர்கள் இருவரும் பொலிஸாரினால் சோதனையிடப்பட்ட போதே இரண்டாயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் இரண்டு கைப்பற்றப்பட்டுள்ளன. (6-4)

# கிளிநொச்சியில் நீர்ப்பாசன கால்வாய்கள் புனரமைப்பு

(கொழும்பு)

மீள்குடியேற்றம் இடம்பெற்று விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் கிளிநொச்சி மாவட்டத்தில் நீர்ப்பாசன வாய்க்கால்களை புனரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளது.

வட பகுதியில் உள்ள பிரதான குளங்களில் ஒன்றான இரணைமடுக்குளத்தின் மூலம் கிளிநொச்சிமாவட்டத்தில் பெரும்பாலான வயல்களுக்கு நீர்பாசன வசதி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

கடந்த யுத்தத்தின் போது சேதமாகியுள்ள இவ்வாய்க்கால்கள் தற்போது திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

இம்முறை காலபோக நெற் செய்கைக்கு முரசுமோட்டை, வட்டக்கச்சி, ஸ்கந்தபுரம், கணேசபுரம் ,கண்டாவளை, உருத்திரபுரம் போன்ற விவசாயப் பிரதேசங்களிலும் கமச் செய்கைக்கு அனுமதிக்கப்படுமென தெரிவிக்கிறது.

இவ் வயல் பிரதேசங்களில் வெடி பொருட்கள் அகற்றும் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# சட்டவிரோதமான முறையில் மென்பொருட்களை பயன்படுத்தும் நாடுகளின் வரிசையில் இலங்கை இரண்டாமிடம்

சட்டவிரோதமான முறையில் போலி மென்பொருட்களை பயன்படுத்தும் நாடுகளின் வரிசையில் இலங்கை ஆசியாவில் இரண்டாம் நிலை வகிப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சட்டவிரோதமான முறையில் மென் பொருட்கள் பயன்படுத்தப்படுவதனால் தொழில்நுட்ப நிறுவனங்கள் கடந்த வருடம் மட்டும் 50 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை இழந்துள்ளது.

புலமைச் சொத்து சட்டங்கள் உலகில் அமுல்படுத்தப்படுகின்ற போதிலும் உலகம் முழுவதிலும் 41 வீதமான கணனிகளில் சட்டவிரோதமான முறையில் பிரதி செய்யப் பட்ட மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2008 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2009 ஆம் ஆண்டில் கணனி மென் பொருள் சட்டவிரோத பாவனை அதிகரித்துள்ளதாக மென்பொருள் வர்த்தக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் மட்டும் 16.5 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் இழக்கப்பட்டுள்ளது.

ஆசியாவிலேயே அதிகளவு மென்பொருள் சட்டவிரோத பாவனை பங்களாதேஷில் இடம்பெறுவதாகவும் இரண்டாம் இடத்தை இலங்கை வகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனோஷியா, வியட்நாம், சீனா இந்தியா போன்ற நாடுகளிலும் மென் பொருட்கள் சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப் படுகிறது.

தனிநபர் கணனிகளின் பாவனை உயர்வினால் இந்த நிலைமை உக்கிரமடைந்துள்ளதென சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆசியாவில் கடந்த வருடத்தில் கணனிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள 900 மில்லியன் மென்பொருட்கள் அனுமதிப்பத்திரமற்ற சட்டவிரோத மென்பொருட்கள் என்பது குறிப்படத்தக்கது. (6-4)


# கூறுவிலை கோரல்

I .சுற்றுலா விடுதி
II. பொறியியலாளர் விடுதி
} இலங்கை மின்சார சபை

இலங்கை மின்சாரசபை பிரதிப் பொது முகாமையாளர் வடமாகாண அலுவலகத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் வசதிகளுடைய ஒரு சுற்றுலா விடுதியும் பொறியியலாளர் விடுதியும் வாடகைக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது.

1. I .சுற்றுலா விடுதி–ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   II. பொறியியலாளர் விடுதி – ஆகக் குறைந்தது நான்கு அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்டதாகவோ அல்லது அதற்கு அண்மித்ததாகவோ இருத்தல் வேண்டும்.
3. நீர் வசதி உள்ளதாகவும் மற்றும் மலசலகூட வசதியுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
4. வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடியதான இடவசதி உள்ளதாக இருத்தல் விரும்பத்தக்கது.
5. குறைந்தது 03 வருடங்கள் பாவனை செய்யக்கூடியதாக ஒப்பந்தம் செய்வதற்கு விருப்பமாக இருத்தல் வேண்டும்.

மேற்படி வசதிகளை உடைய கட்டிட உரிமையாளர்கள் தங்கள் கூறுவிலைகளைப் பதிவு செய்யப்பட்ட காணி உறுதிப் பிரதிகளுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு 2010.05.20 ஆம் திகதி பி.ப.02.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும் படி கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பிரதிப் பொது முகாமையாளர்(வடக்கு),**
**பிரதிப் பொது முகாமையாளர் (வ) அலுவலகம்,**
**இலங்கை மின்சார சபை,**
**இல.500 , காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

*தொலைபேசி இல.021 222 2496*
*021 222 3233*
*தொலைநகல் இல.021 222 2497*

**"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளிற்கு கை கொடுக்கும்"**
**இலங்கை மின்சார சபை.**

(சி/249)

# நாடு முழுவதும் முறையான மருத்துவ சேவையை வழங்க ஜனாதிபதி செயலணியுடன் இணைந்த வேலைத்திட்டம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாடு முழுவதிலும் முறையான மருத்துவ சேவையை வழங்க ஜனாதிபதி செயலணியுடன் இணைந்த வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அமைச்சு மற்றும் சுகாதாரத்துறை நிறுவனங்களில் நிலவும் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் விசேட தொழில் ஆலோசனைச் சபையொன்றை அமைக்க தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அரசாங்க வைத்தியசாலைகளில் கையிருப்பிலுள்ள சேலைன் போத்தல் உட்பட சில முக்கிய மருந்து வகைகள் தீர்ந்து விட்டதாக வெளியான செய்திகளில் எதுவிதமான உண்மையும் கிடையாது என்று சுகாதார அமைச்சர் மறுத்துள்ளார்.

சர்வதேச தாதியர் தின நிகழ்வு நேற்று முன் தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டில் சகல பிரதேசங்களிலும் முறையான மருத்துவ சேவையை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அடுத்த வாரம் ஜனாதிபதி செயலணிடன் இணைந்த வேலைத் திட்டமொன்றை நாட்டின் 65 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அமைச்சு மற்றும் சுகாதாரத்துறை நிறுவனங்களில் நிலவும் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் விசேட தொழில் ஆலோசனைச் சபையொன்றை அமைக்கவும் தீர்மானித்துள்ளேன் என்றார். (4-6)

# ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை வெள்ளிக்கிழமை பகல் 10.30 மணியளவில் இராமநாதன் நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த ஏரம்பு துஷந்தா இன்னிசை வழங்கவுள்ளார். (4-35)

## கனடாவில்

# புலிகளுக்கு நிதி சேகரிப்பில் ஈடுபட்ட நபருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

கனடாவில் விடுதலைப்புலிகள் அமைப்பிற்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த நபருக்கு எதிராக கனேடிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இலங்கைச் சேர்ந்தவரான பிரபாகரன் தம்பித்துரை என்பவர் விடுதலைப்புலிகள் அமைப்பிற்காக கனடாவில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

இந்நிலையிலேயே குறித்த நபருக்கு எதிராக கனடாவின் பயங்கரவாத நிதிச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. (4-6)

# மெனிக்பாம் இடம்பெயர் முகாமில் தொற்றுநோய் பாதிப்பு அதிகரிப்பு

## உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

மெனிக்பாம் இடம்பெயர் முகாமில் தொற்று நோய் பாதிப்பு அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

முகாம் மக்களிடையே வயிற்றோட்டம் மற்றும் அம்மை போன்ற நோய் பாதிப்பு உயர்வடைந்துள்ளதாக அது குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அம்மை நோய் தொடர்பில் சுகாதார அமைச்சு முகாம் மக்களிடையே விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார சேவைகளை வழங்கிய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பல சேவைகளை முடிவுறுத்திக் கொண்டுள்ள நிலையில் முகாம்களில் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (6)

# வன்னியிலுள்ள ஒவ்வொரு கிராமத்தையும் தத்தெடுத்து அம்மக்களுக்கு உதவ வேண்டும்

## மறைமாவட்டங்களிடம் மன்னார் ஆயர் கோரிக்கை

(கொழும்பு)

வன்னியில் மீள் குடியேறும் மக்களின் அவலங்களை கண்ணுற்ற நான் இப்பகுதியிலுள்ள ஒவ்வொரு கிராமத்தையும் தத் தெடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவும் படி இலங்கையின் ஒவ் வொரு மறைமாவட்டத்தையும் வேண்டிநிற் கின்றேன். என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தெரி வித்தார்.

அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் (ஐ.ஓ.எம்.) நிறுவனத்தினால் மன்னார் மாவட்டத்திலுள்ள பேசாலை மீனவச் சமூ கத்துக்கு 2 கோடியே 26 இலட்சம் ரூபா பெறுமதியான 28 அடி நீளம் 9 அடி அகலம் கொண்ட 9 இழுவைப்படகுகள் இலவசமாக வழங்கப்பட்ட வைபவம் கடந்த சனிக்கிழமை பேசாலையில் நடை பெற்றது.

இங்கு ஆயர் இராயப்பு யோசப் தொடர்ந்து பேசுகையில்,

புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பு ஐ.ஓ.எம். ஒரு பாரியதிட்டமாக மன்னார் மாவட் டத்தில் இந்த பேசாலை மீனவர்களுக்கே முதன் முதலாக சேவை செய்கின்றது. இன்று இந்த மாவட்டத்தில் உள்ள பல கிராம மக்கள் தங்களிடம் இருந்த அனைத்தையும் இழந்தவர்களாக தங்கள் வாழ் வாதாரத்துக்கே வழி யில்லாத நிலையில் தவிக்கும் இச் சமயத்தில் பேசாலை மீனவ சமூகத்துக்கு ஒரு தூரநோக்கோடு இந்த உதவி மேற்கொள் ளப்படுவதானது நீங்களும்பாதிப்பு அடைந்தவர்களில் ஒருபகுதியினர் என்பதனாலாகும்.

ஆகவே இவ் உதவி உங்களில் ஒரு சிலருக்கு தான் என நீங்கள் எண்ணிவிடக்கூடாது. இதன் மூலம் இங்குள்ள ஏழை மீனவ சமூகமும் நன்மை பெறவேண்டும். அத்துடன் எமது அயலிலுள்ள மீனவ குடும்பங்கள் தங்கள் அன்றாட வாழ்வுக்கு ஏங்கிச் கொண்டிருக்கின்றனர்.

ஆகவே நீங்கள் இந்த நன்கொடை மூலம் ஒரு மீனவக் கிராமத்தை தத்தெடுத்து அவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு உதவி புரிய வேண்டும். இப்படியான வேண்டுகோளை உங்களுக்கு மட்டுமல்ல இலங்கையின் மறைமாவட்டங்களுக்கும் நான் விடுத்துள்ளேன்.

நீ கொடு உனக்கு கொடுக்கப்படும் இலவசமாகக் பெறுவதை இலவசமாக கொடுங்கள் என்பது இறைவார்த்தை . ஆகவே இவற்றை சிந்தித்தவர்களாக நீங்களும் செயல்பட்டால் இறைவனின் ஆசீர்வாதம் உங்களுக்கும் கிடைக்கும் என்றார். (6-4)

# கட்டுநாயக்க -கொழும்பு இடையிலான ரயில் சேவைகளை ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கும் கொழும்பு கோட்டைக்கும் இடையில் ரயில் சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பில் ஜுன் மாதம் நடைபெறவிருக்கின்ற சர்வதேச இந்திய திரைப்பட அக்டமி விருது வழங்கும் விழாவிற்கு முன்னர் ரயில் தண்டவாளங்களை புனரமைத்து பாதையை சீரமைக்கும் வேலைகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

திரைப்பட விழாவில் பங்கேற்பதற்காக வெளிநாடுகளிலிருந்து வருகைதரவிருக்கின்றவர்கள் இந்த ரயிலில் பயணிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. திரைப்பட விழா நிறைவடைந்ததன் பின்னரும் அந்த ரயில் சேவை நடத்தப்படும் என்றும் அதில் வெளிநாட்டவர்களே பயணிக்க முடியும் என்றும் திணைக்களம் அறிவித்துள் ளது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் கட்டுநாயக்கவிலிருந்து ஏனைய இடங்களுக்கு ரயில் சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பில் எதிர்காலத்தில் கலந்தாலோசித்து தீர்மானம் எட்டப்படும் என்று திணைக்களம் அறிவித்துள்ளது. (4-6)

# ஊடகவியலாளர்களுடன் சிறந்த நட்புறவை பேணி பணியாற்றுவதையே விரும்புகிறேன்

## ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

திறந்த மனதுடன் வெளிப்படையாகப் பணியாற்றுவதே தனது நோக்கம் என்றும் அமைச்சர் என்ற வகையில் இல்லாமல் ஊடகவியலாளர்களுடன் சிறந்த நட்புறவைப் பேணி பணியாற்றுவதையே தாம் விரும்புவதாகவும் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அமைச்சர் நிறுவனத் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் பந்துல பத்மகுமார பதவியேற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் ,

அமைச்சர் தலைவர் என்ற அடிப்படையில் அல்லாமல் சுமுகமான உறவைப் பேணி செயற்படவே விரும்புகிறேன். பெரிய அளவில் பிரச்சினைகளைத் தீர்ப்பதைவிட சுமுகமாகத் தீர்த்துவிடலாம். நாட்டை வெற்றியடையச் செய்யும் பயணத்தில் அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டுமென்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

திறந்த மனசுதுடன் வெளிப்படையாகப் பணியாற்றுவதே எனது நோக்கம். நாட்டுக்கும் மக்களுக்கும். சேவையாற்றும் பாரிய



பொறுப்பு நமக்குண்டு அதனை உணர்ந்து அனைவரும் செயற்படவேண்டும். எவர் எதைச் செய்தாலும் இறுதியில் அனைத்துப் பொறுப்பும் அமைச்சரின் மீது தான் சுமத்தப்படும். எனவே புரிந்துணர்வுடன் செயற்பட்டால் நாம் நீண்ட தூரம் பயணிக்க முடியும். (6)

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48


விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2010

# இலங்கை அரசை மிரட்டுவதற்கு அடியாட்களைத் தேடுகின்றது இந்தியா



நான்காவது ஈழப்போர் நிறைவடைந்து ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையில் அதனை முன்னின்று நடத்திய இந்தியா, வடக்கு -கிழக்கில் வலுவாகக் கால்பதிப்பது என்ற தனது அபிலாஷைகளை தக்கவைப்பதற்கு கடுமையாக போராட வேண்டிய நிலையில் உள்ளது.

வடக்கு - கிழக்கில் தனது ஆதிக்கத்தை தக்கவைப்பது என்ற எழுதப்படாத பேரத்தின் அடிப்படையில் தான் இந்தியா இலங்கை அரசுக்கு ஆதரவாக தமிழ் மக்களுக்கு எதிரான போரை மேற்கொண்டிருந்தது.

போர் நடைபெற்றபோது அதற்கான உடன்பாடுகளையும் இந்தியா இலங்கை அரசின்மூலம் பெற்றிருந்தது. வடக்கில் பலாலி விமானப் படைத்தளம் புனரமைப்பு, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் ஒப்பந்தம், வடக்கில் பொருளாதார அபிவிருத்தி என்பனவும், கிழக்கில் சம்பூர் அனல் மின்நிலையம், பொருளாதார அபிவிருத்தி என அது தனது ஊடுருவலுக்கு ஏதுவான பொருளாதார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

போர் நிறைவடைந்த நிலையில் அதனால் ஏற்பட்டுள்ள போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகிய விடயங்களை கையாள்வதற்கும் இந்தியாவின் உதவி இலங்கைக்கு தேவைப்பட்டது. அதனை இலங்கை அரசு கேட்காமலேயே இந்தியா தன்னிச்சையாக வழங்கி வருகின்றது.

பொருளாதார உதவிகளையும், படைத்துறை உதவிகளையும், இராஜதந்திர ஆதரவுகளையும் இந்தியா இலங்கைக்கு அளவுக்கு அதிகமாக வழங்கி வருவதைத் தொடர்ந்து அதற்கான காரணத்தை இலங்கை அரசு இலகுவாக இனம் கண்டுகொண்டுள்ளது.

அதாவது தென்னிலங்கை சீனாவின் வசம்போனாலும் பரவாயில்லை. வடக்கு -கிழக்கில் மேற்குலகம் கால்பதித்து விடக்கூடாது என்பதே இந்தியாவின் கொள்கையாக உள்ளது. இலங்கை கேட்காமலேயே அதற்கு உதவ இந்தியா எப்போதும் தயாராகவே உள்ளது.

ஆனால் இலங்கையின் அடுத்த கட்ட நகர்வு என்பது மாறுபட்டது. அதாவது முதலில் இந்தியாவை அரவணைத்து போரை நிறைவு செய்வது பின்னர் இலங்கையிலிருந்து சீனாவின் துணையுடன் இந்தியாவை வெளியேற்றுவது இதுதான் இலங்கையின் திட்டம்.

ஏனெனில் தென்னிலங்கை சிங்கள மக்கள் ஒருபோதும் இந்தியாவுக்கு ஆதரவாக இருந்ததில்லை. பங்களாதேசம் மீதான போரின் போதும் இலங்கை பாகிஸ்தானுக்கே ஆதரவாக இருந்தது.

1988களில் ஜே.வி.பியின் இரண்டாவது புரட்சி உக்கிரமடைவதற்கான ஆதரவுகளை தென்னிலங்கை மக்கள் வழங்க காரணமாக அமைந்ததும் வடக்கு -கிழக்கில் நிலை கொண்டிருந்த இந்தியப் படையினர் தான்.

எனவே இலங்கையின் கணக்குகள் சுலபமானது. அதாவது முதலில் இந்தியாவைக் கொண்டு விடுதலைப் புலிகளை அழிப்பது. அதன் பின்னர் சீனாவில் மறைமுக அழுத்தங்களுடன் இலங்கையில் இறைமை என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி இந்தியாவை வெளியேற்றுவது.

அதற்கான ஆரம்பப் பணிகள் சம்பூரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட சம்பூர் அனல் மின்நிலைய ஒப்பந்தம் தற்போது கைவிடப்படும் நிலையை அடைந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஆனால் தமது அனல் மின்நிலையத் திட்டம் மேலும் நான்கு வருடங்கள் பிற்போடப்பட்டுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

நுரைச்சோலையில் சீனா அமைத்து வரும் அனல் மின்நிலையத்தின் முதலாம் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன. அதன் இரண்டாம் கட்டப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

**வேல்ஸிலிருந்து அருஷ்**

அந்த மின் நிலையத்தின் மூலம் 900 மெகாவற் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். அதுவே இலங்கைக்கு போதுமானது என்பதால் சம்பூர் அனல் மின்நிலையம் தமக்கு தேவையற்றது என இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமல்லாது இலங்கை உயர் நீதிமன்றத்தின் அனுமதிகள் கிடைக்கவில்லை எனத் தெரிவித்து அதனை அவர்கள் வேண்டுமென்றே தாமதித்தும் வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகளை மெல்ல மெல்ல அறிந்துகொண்ட இந்தியா தற்போது வடபகுதியில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தி வருகின்றது. வடபகுதியின் புகையிரதப் பாதைகளின் புனரமைப்புக்காக தொழில்நுட்பவியலாளர்களை அனுப்பியுள்ள இந்தியா இரணைமடுவில் வான்புலிகள் முன்னர் பயன்படுத்திய விமானப் படைத்தளத்தையும் தன் வசமாக்க முயன்று வருகின்றது.

அதுமட்டுமல்லாது பலவந்தமாக திருமலைக்கு சென்ற இந்திய கடற்படை தரையிறங்கு கலம், இலங்கை கடற்படையினருக்கு பயிற்சிகளையும் வழங்கியிருந்தது. யாழ்ப்பாணத்தில் இந்தியத் தூதரகத்தின் கிளை அலுவலகம் ஒன்றையும் அது அவசரமாக திறந்துள்ளது.

ஆனால் இலங்கையின் நகர்வுகள் மிகவும் தெளிவானவை, அவர்கள் இந்தியாவுடன் உடனடியான ஒரு மோதலுக்கு இறங்கப் போவதில்லை. ஆனால் பிராந்திய மற்றும் இராஜதந்திர அழுத்தங்களை மேற்கொண்டு இந்தியாவை மெல்ல மெல்ல வெளியேற்றும் செயல்களையே அது மேற்கொண்டு வருகின்றது.

உதாரணமாக சம்பூர் அனல் மின்நிலையத்தின் பணிகளை கைவிட்டுள்ள இலங்கை அரசு தற்போது வடக்குப் பகுதியின் புகையிரதப் பாதைகளின் புனரமைப்பிலும் சீனாவை களமிறக்கியுள்ளதுடன், பாகிஸ்தானுடனும் புதிய பாதுகாப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

தென்னிலங்கையை விட வடபகுதியில் சீனா கால்பதிப்பது இந்தியாவுக்கு ஆபத்தானது. தென்னிந்தியாவில் இருந்து 30 மைல் தொலைவில் ஏற்படும் சீனாவின் பிரசன்னம் தமக்கு அதிகம் ஆபத்தானது என இந்தியா கருதலாம். ஆனாலும் அதனை விட ஆபத்தானது மேற்குலகத்தின் உள்நுழைவு என இந்தியா கருதுகின்றது.

இலங்கை அரசின் புறம் தள்ளல்களை முன்னரே எதிர்பார்த்த இந்தியா தனது கட்டுப்பாட்டில் இயங்கக் கூடிய ஒரு சிறிய ஆயுதக் குழுவை வடக்கு -கிழக்கில் தக்கவைக்க திட்டமிட்டிருந்தது. அதற்காக இறுதிக்கட்டப் போரின் போது விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து தப்பிச் சென்றவர்கள் சிலரின் உதவியையும் அது நாடியிருந்தது.

ஆனால் அது வெற்றிபெறாததால் தென்னிந்தியாவில் இருந்த ஈஎன்டிஎல்எஃப் எனப்படும் ஆயுதக் குழுவை வடபகுதிக்கு கொண்டுவர திட்டமிட்டிருந்தது.

அதனால் அதுவும் வெற்றி பெறவில்லை. இந்தநிலையில் தான் புதிய ஒரு ஆயுதக்குழு உருவாகி உள்ளதாகவும், அதன் தலைவர் கோணேஸ் எனவும் அண்மையில் ஒரு அறிவித்தலும் வெளியாகியிருந்தது.

ஆனால் எல்லா நகர்வுகளும் பிசுபிசுத்துப்போன நிலையில் தற்போது கிழக்கில் ஒரு உறுதி அற்ற நிலையை ஏற்படுத்தும் திட்டங்களை இந்தியா வகுத்துக்கொண்டுள்ளது.

அதற்கு அமைவாக கிழக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான பிள்ளையான் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியுடன் இந்தியா தனது நெருக்கத்தை அதிகரித்து வருகின்றது.



கடந்த மார்ச் மாதம் 6ஆம் திகதி மூன்று நாட்கள் விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ் தாஜ் சமுத்திர ஹோட்டலில் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் ரி.எம். வி.பி.கட்சியின் தலைவருமான பிள்ளையானை சந்தித்து அவரை இந்தியா வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட இந்தக் கட்சியின் உறுப்பினர்கள் எதிர்வரும் மாதம் இந்தியா செல்லவுள்ளனர்.



நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் சந்தித்த ரி.எம்.வி.பி.கட்சியைக் கொண்டு இந்தியா என்ன செய்யப் போகின்றது என்பதை எவரும் இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

இக்கட்சியை வைத்து இலங்கை அரசை மிரட்டுவதற்கு இந்தியா முற்படலாம். ஆனால் இந்தியாவின் துணையுடன் எதனை சாதிக்க முடியும் என்பதற்கு 1989 மற்றும் 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்கள் சாட்சியாகும்.

மேலும் இந்தியாவின் நலன்களுக்காக குறிக்கோள்கள் அற்ற நடவடிக்கைகளில் ஈடுபட ஈழத் தமிழ் சமூகம் தயாராக இல்லை என்பதை மிக விரைவில் இந்தியாவுக்கு புரியும் மொழியில் உணர்த்த தமிழ் இனம் தயாராகி வருகின்றது.

நன்றி - ஈழமுரசு






அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டம் மற்றும் அளவெட்டி நலன்புரிச் சங்கம் இணைந்து நடத்திய நிலாக்காலம் கலைநிகழ்வில் பெ.கனகசபாபதி தவில் கலைஞர் தே.சிவமூர்த்திக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், இசையரங்கில் பங்குபற்றிய கலைஞர்களையும், ஆசிரியை திருமதி மனோரதி கணேசலிங்கத்தின் நெறியாள்கையில் உருவான “ஆறுமுகன் அருள்” நாட்டிய நாடகத்தில் பங்குகொண்ட மாணவர்களையும், குழு நிகழ்வில் பங்குபற்றிய மகாஜன சபை ஈஸ்வரன் முன்பள்ளி மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## உரிய முறையில் பணிகளை மேற்கொள்ளாத அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது நடவடிக்கை

### வட மாகாண ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இயங்கிவரும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி நிலைமை மற்றும் அந்த அமைப்புகள் வடபகுதி மக்களுக்கு வழங்கிவரும் நிவாரணங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்து எதிர்வரும் 16 ஆம் திகதிக்குப் பின்னர் ஆராயப்படும் என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

மாகாணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பிரதேசங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும் அவை தமது இலக்கை பூர்த்தி செய்துள்ளதா என்பது குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படும் எனவும் ஆளுநர் கூறியுள்ளார்.



உரியமுறையில் பணிகளை மேற்கொள்ளாத அரச சார்பற்ற நிறுவனங்களின் மீது எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என சந்திரசிறி குறிப்பிட்டுள்ளார். (4-6)

## மன்னாரில் 49 வீடுகள் உரியவர்களிடம் கையளிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 180 நாள் வேலைத்திட்டத்தின் மூலம் வீடமைப்பு அதிகார சபையின் முயற்சியினால் மன்னார் பள்ளிமுனையில் நிர்மாணிக்கப்பட்ட 49 வீடுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச, வர்த்தக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ரிஷாட் பதியுதீன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹுசேன்பாருக் ஆகியோர் வீடுகளை உரியவர்களிடம் கையளித்துள்ளனர்.

இதேவேளை துணுக்காய் பகுதியில் மீள்குடியேறிய வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவர்களின் குறைகளையும் கேட்டறிந்து கொண்டார். (4-6)

## மல்வானையில் மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவர் ஆற்றில் குதித்து தற்கொலை

(கொழும்பு)

பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வானையில் மன நிலை பாதிக்கப்பட்ட ஒருவர் ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

38 வயதுடைய முஹம்மத் சல்மான் என்பவரே நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டார். குறித்த நபரின் சடலம் கடற்படையினரின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ள நிலையில், பிரேத பரிசோதனை தற்போது இடம்பெற்று வருகிறது. (6-4)

## யுத்தத்தால் சேதமடைந்த தபால் அலுவலகங்களை துரிதகதியில் புனரமைக்க நடவடிக்கை

### தபால்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குப் பகுதியில் கடந்த காலங்களில் யுத்தம் காரணமாக சேதமடைந்த தபால் அலுவலகங்களை துரித கதியில் புனரமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தபால் மா அதிபர் பி.திசாநாயக்க தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் இவ்வாறு தபால் அலுவலகங்களை புனரமைக்க நிதி கிடைத்துள்ளதாகவும் தபால்மா அதிபர் குறிப்பிட்டார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது,

வடக்கு மாகாணத்தில் புதிய தபால் நிலையங்களை அமைக்கவும் கடந்த காலங்களில் யுத்தம் கார்ணமாக சேதமடைந்த தபால் அலுவலகங்களை விரைவில் புனரமைக்கவும் தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முக்கியமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தபால் அலுவலகங்களை புனரமைக்க வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். ஏற்கனவே கிளிநொச்சி, மாங்குளம் மற்றும் பளை போன்ற பிரதேசங்களில் தபால் அலுவலகங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத் திட்டங்களுக்காக எமக்கு நிதியும் கிடைத்துள்ளது. மேலும் வடக்கில் தபால் திணைக்களத்தின் வேலைத் திட்டங்களை விரைவாக மேற்கொள்ளவுள்ளோம்.

முக்கியமாக தபால் அலுவலகங்களில் நவீன உபகரணங்களை பயன்படுத்துவதற்கு ஏதுவான வகையில் செயற்பாடுகளை முன்னெடுப்போம். வடக்குப் பகுதியில் இதற்கான தேவைகள் அதிகமாகவே காணப்படுகின்றன.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் தபால் துறையில் அதிகளவான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எனவே வெற்றிடங்களை நிரப்ப விரைவில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடக்குப் பகுதியில் உள்ள திறமையானவர்களைக் கொண்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கே முன்னுரிமை வழங்கவுள்ளோம்.

அத்துடன் தபால் திணைக்களத்தை இலாபகரமான திணைக்களமாக மாற்றியமைக்க நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். அதற்காக தபால் திணைக்களத்தின் ஊடாக புதிய சேவைகளை அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம் என்றார். (4-6)

## நாட்டின் அபிவிருத்திக்கு அரச அதிகாரிகளின் அர்ப்பணிப்பு அவசியம்

(கொழும்பு)

யுத்தமற்ற அமைதிச் சூழலை வாய்ப்பாக்கிக் கொண்டு நாட்டை பொருளாதாரத்திலும் அபிவிருத்தியிலும் கட்டியெழுப்புவதற்கு அரச அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுவது அவசியமென பிரதிநிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஆசியாவின் முன்னோடி நாடாக இலங்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்கு முழுமையான பங்களிப்பை நிதியமைச்சின் மூலம் வழங்குவதாகத் தெரிவித்த அவர் நாட்டின் பொருளாதார கேந்திரமாகவுள்ள நிதியமைச்சின் செயற்பாடுகளை பாமர மக்களும் அறிந்துகொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்தார்.

இன்றைய சூழல் நாட்டைப் பொருளாதாரத்திலும் அபிவிருத்தியிலும் கட்டியெழுப்ப மிகவும் உகந்ததாகவுள்ளது. அரச அதிகாரிகள் தம் அர்ப்பணிப்புடனான சேவையினால் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும் என அமைச்சர் சரத் அமுனுகம கேட்டுக்கொண்டார். (6-9)

## திருமலை மாவட்ட தேர்தல் முடிவுகள்

### சட்டவிரோதமானதென தீர்ப்பளிக்குமாறு மனுத்தாக்கல்

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத் தேர்தல் முடிபுகள் சட்டவிரோதமானது என தீர்ப்பளிக்குமாறும் சுசந்த புஞ்சி நிலமே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதை இரத்துச் செய்யுமாறும் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்ட கே. திருச்செல்வம் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல் நடைபெற்ற காலப்பகுதியில் பாரியளவில் தேர்தல் மோசடிகளும் வாக்காளர்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டதுடன் அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்றதாக மனுதாரர் கூறியுள்ளார்.

சுசந்த புஞ்சி நிலமேயின் ஆதரவாளர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு இலஞ்சம் கொடுத்ததாகவும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள வாக்காளர்களை வாக்களிக்கவிடாது அவர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டு தேசிய அடையாள அட்டைகளும் வாக்காளர் அட்டைகளும் பெறப்பட்டதாகவும் திருச்செல்வம் தனது மனுவில் கூறியுள்ளார்.

மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க திருகோணமலை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ரி.எச்.ஆர்.டி சில்வா உள்ளிட்டோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (4)

## வாகனத்திலிருந்து கைத்துப்பாக்கி மீட்பு

(புத்தளம்)

புத்தளத்தில் இருந்து ஆனமடுவ நோக்கிச் சென்ற வானொன்றில் சாரதியின் ஆசனத்தின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த தன்னியக்கத் துப்பாக்கி ஒன்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு தொகை ரவைகளும் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆனமடுவ பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட வாகனப் பரிசோதனையின் போது சந்தேகத்திற்குரிய இந்த வாகனம் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

இது தொடர்பாக இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வானும் பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஆனமடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-3-9)

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

ஆசிரியர்:- எஸ்.ஏ.சந்திரபவன்
புலமைப்புலரி பப்ளிகேஷன்

## மாதிரி பரீட்சை – 02
## வினாத்தாள் – II

நேரம்- 1 மணி 15 நிமிடம்

கறுப்பு வண்ணக் காக்கையாரே
கண்ணை உருட்டிக் கரைகின்றாய்
விருந்தில் கலந்து கொள்ளவா
விரைந்து உறவை அழைக்கின்றாய்?

ஒற்றுமையின் வலிமையை
உணர்த்த வானில் கரைகின்றாய்
வண்ணம் கறுப்பே ஆனாலும்
வருத்தம் மனதில் இல்லையே!

01.மேலுள்ள பாடலை நன்றாக வாசித்து அது தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

1.கறுப்பு என்பதன் ஒத்தசொல் ஒன்று எழுதுக.
(.................................................)

2. ஒற்றுமை என்பதன் எதிர்கருத்தை எழுதுக.
(.................................................)

3.கண்ணை எனும் சொல்லைப் பன்மையாக எழுதுக.
(.................................................)

4. கண்ணை உருட்டிக் கரையும் பறவை எது?
(.................................................)

5.எதைப்பற்றிய வருத்தம் இப்பறவையின் மனதில் இல்லை எனக் கூறப் படுகின்றது?
(.................................................)

(5புள்ளிகள்)

02. கீழ்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.

1.வண்ணம் : ..................................................
2.கண்: ..................................................

(2புள்ளிகள்)

03.கீழ்வரும் சொற்களின் எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.

1.கறுப்பு :..................................................
2.ஒற்றுமை :..................................................

(2புள்ளிகள்)

04.கீழ்வரும் வாக்கியங்களை வாசித்து விடை தருக.

அ.வேலியோரத்தில் சரசார வெனும் சத்தத்தைக் கேட்ட ஆதவன் அங்குமிங்கும் பார்த்தான்.
1. இவ்வாக்கியத்தில் உள்ள இணைமொழி யாது?
..................................................

2.இவ்வாக்கியத்தில் காணப்படும் இரட்டைக் கிளவிச் சொல் எது?
..................................................

ஆ.விட்டுக் கொடுத்து வாழும் வாழ்க்கையே சிறந்தது.
3, இவ்வாக்கியத்தில் உள்ள மரபுத் தொடரை எழுதுக.
..................................................

இ. வானம் மெல்ல மெல்ல கறுக்கத் தொடங்கி சற்று நேரத்தில் ஒரே கன்னங்கரிய இருட்டாக மாறிவிட்டது.
4. இவ்வாக்கியத்தில் உள்ள அடுக்குத் தொடர் யாது?
..................................................

5.இவ்வாக்கியத்தில் உள்ள அடுக்கிடுக்குத் தொடர் யாது?

(5புள்ளிகள்)

05.கீழ்வரும் வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. மனதினை ஒரு நிலைப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழி எது?
1. உடற்பயிற்சி 2.தியானம் 3.நித்திரை

2. ஆரோக்கியமான விரும்பத்தக்க செயல் பின்வருவனவற்றுள் எது?
1.தனித்துவேலை செய்தல்
2. சுயநலமாயிருத்தல்
3. கூட்டாக வேலை செய்தல்

3. வளர்ப்புத் தாயாக சில சந்தர்ப்பங்களில் செயற்படும் பறவை எது?
1.குயில் 2. காகம் 3. கிளி

4. தனது முயற்சியினால் கூடு ஒன்றினை அமைத்துக்கொள்ளும் பறவை எது
1.கிளி 2. மைனா 3.புறா

5. பகலில் அதிக நடமாட்டம் இல்லாத இரவில் இரைதேடும் பிராணி எது?
1.நாய் 2.முயல் 3.பூனை

6.பின்வரும் விளையாட்டுக்களில் எமது நாட்டின் தேசிய விளையாட்டு எது
1.கரப்பந்தாட்டம் 2. எல்லே 3. வலைப்பந்தாட்டம்

7.தேசியக்கொடியில் இடம்பெறாத அம்சம் பின்வருவனவற்றுள் எது?
1.அரசஇலை 2. தர்மச் சக்கரம் 3.சிங்கம்


8. சிகிரியாக் குன்றும் கிளிகளும் இடம்பெற்றுள்ள தாள் நாணயம் எது?
1. 10ரூபா 2.50 ரூபா 3.100 ரூபா


9. இக்குறியீடு எதனை உணர்த்துகின்றது?
1.ரூபவாஹினி கூட்டுத்தாபனம்
2.பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
3.தபால் திணைக்களம்

10. ஒரு பொருளின் விலையோடு தொடர்புடைய இரகசியக் குறியீடு பின்வருவனவற்றுள் எது?
1) 2) 3) RS


(10புள்ளிகள்)

06. கீழே தரப்பட்டுள்ள உருக்களின் பெயர்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக

i) 
(.........................)


ii) 
(.........................)

iii) 
(.........................)

iv) 
(.........................)

(4 புள்ளிகள்)

07.இலங்கையின் அரச இலச்சினையும் பகுதிகளின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. பெயர்களுக்கு எதிரேயுள்ள அடைப்புக்களில் பொருத்தமான பகுதிகளின் ஆங்கில எழுத்துக்களை எழுதுக.




1. தர்மச் சக்கரம் (.................................)
2.செங்கதிர் (.................................)
3.தாமரைப் பூவிதழ் (.................................)
4.சந்திரன் (.................................)
5.சூரியன் (.................................)
6.நிறைக்கலசம் (.................................)

(6புள்ளிகள்)

08.1. 
இங்கு அமர்ந்திருப்பவரின் நிலை யாது?

(.........................................)

2. 
இங்கு காட்டப்பட்டுள்ள முகம் வெளிப்படுத்தும் உணர்வு யாது?

(.........................................)

3. 
இச்செயல் நீர் விரும்பும் செயல்களில் ஒன்றா? (ஆம் /இல்லை)

(.........................................)

(3புள்ளிகள்)

09. கீழே தரப்பட்டுள்ள மீன் உருக்களில் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து அதன் கீழ்வரும் வினாக்களில் மீன்களால் குறிக்கப்பட்டுள்ள எண்களை இனங்கண்டு விடை தருக.




1. 
இவ்வெண்ணை எழுதுக.

(.........................................

2. இவ்வெண்ணிலிருந்து 312 எனும் எண்ணைக் கழித்து எழுதுக.

(.........................................)



3. எனும் எண்ணைச் சொற்களில் எழுதுக.

(.........................................)

4. தரப்பட்டுள்ள இலக்கங்களினால் ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண் யாது?


(.........................................)

5. நீர் ஆக்கிய மிகப் பெரிய எண்ணிலிருந்து 1234 எனும் எண்ணைக் கழித்து எழுதுக.

(.........................................)

(10புள்ளிகள்)


10. கீழ்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.

1. இச்சதுரத்தின் பரப்பளவு யாது? 

(.................)

2. iii+iv என்பதைக் கூட்டி எழுதுக.

(.................)

3. 

இவ்வுருவின் சுற்றளவு யாது?

(.........................)

4. உமது கணித உபகரணப் பெட்டியில் உள்ள 15 cm நீளமுள்ள அடி மட்டத்தினால் ஆசிரியரின் மேசையினை அளந்தபோது 8 அடி மட்டங்கள் அளவு காணப்பட்டது. எனவே ஆசிரியர் மேசையின் மொத்த நீளம் யாது?

(.........................................cm)


5. வைத்தியரினால் உமக்கு வழங்கப்பட்ட 45 ml பாணி மருந்தினை 5 ml அளவு கரண்டியினால் தினமும் மூன்று வேளை அருந்துவீராயின் அம்மருந்தினை எத்தனை நாட்களுக்கு அருந்த முடியும் ?

(.........................................)


6. 400 g பால்மாவினை 100gகொண்ட 4 பொதிகளில் அடைக்கலாம் எனின் 1 பால்மாவின் 100g கொண்ட எத்தனை பொதிகள் செய்யலாம்?


(12 புள்ளிகள்)

11. பின்வரும் வினாக்களுக்கான விடைகளைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.



1. இவ் உபகரணத்தின் பெயர் அல்லது பொறிமுறை யாது?

(.........................................)


2. இப்பரிசோதனை (................ .............) (நீரின் / பஞ்சின்)இயல்பைக் கண்டறிவதற்காகச் செய்யப்பட்டுகின்றது. (இடைவெளிக்குப் பொருத்தமானதை எழுதுக)



3. இந்த உபகரணத்தின் பெயர் யாது?

(.........................................)



4. அங்குள்ள மீன் படத்தில் மீன் நீந்திச் செல்வதற்கு துடுப்பாகப் பயன்படும் செட்டையைக் குக்கும் ஆங்கில எழுத்து எது?

(.........................................)


5. தையல் கலையோடு தொடர்புடைய இக் கருவியின் பெயர் யாது?(.....................)

(5 புள்ளிகள்)

12. கீழே தரப்பட்டுள்ள தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1. வெண்கட்டி : .........................................
2. வகுப்பறை :.........................................
3. விமான நிலையம்:.........................................
4. பலூன்:.........................................

13. இங்கு தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்க்கருத்துச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1. **Bottles** .........................................
2. **Captain:** .........................................
3. **Railway :**.........................................
4. **Postman :**.........................................

14. கீழே ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1. அமைதியாக /கொண்டிருந்த /ஓடிக் /கங்கை/மாணிக்க

.........................................................................

2. நின்றவர் /எல்லோரும்/வானத்தைப்/ கொண்டு /பார்த்துக்

.........................................................................

(4 புள்ளிகள்)

15. கீழ்வரும் சிங்களச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களைத் தருக.

1. பொல்..........................
2. லொ (க்) கு ..................................
2. பு (திதா ..........................

(3புள்ளிகள்)

16. சங்கரின் வீட்டைச் சுற்றி எண்ணற்ற கொய்யா மரங்கள் காய்த்துப் பழுத்திருந்தன. பழுத்த கொய்யாப் பழங்களை உண்பதற்காக ஏராளமான பறவைகள் வந்த வண்ணமிருந்தன. ஒரு நாள் அங்கு வந்திருந்த கொண்டைக் குருவியைப் பிடித்துத் தொட்டுப் பார்க்க சங்கர் ஆசைப்பட்டான். மேலே ஒரு சம்பவம் ஆரம்பித்து விடப்பட்டுள்ளது. மேலும் யாது நிகழ்ந்திருக்கும் என கற்பனை செய்து இந் நிகழ்வினைத் தொடர்ந்து 6 வாக்கியங்கள் எழுதுக.

1. ________________
2. ________________
3. ________________
4. ________________
5. ________________
6. ________________

# களம் பல கண்ட யாழ் கோட்டை

32

## ஈழயுத்தம் -2

மண்டைதீவு மகாவித்தியாலயமும் றோமன் கத்தோலிக்கப்பாடசாலையும் இரா ணுவ முகாம்களாகப் பாவிக்கப்பட்டன. மகாவித்தியாலயம் பிரதான முகாமாகவிருந்தது. அவ் வித்தியாசாலையின் முன்னுள்ள பனங்கூடலிருந்த அத்தனை பனை மரங்களும்



க்கப்பட்டு சென்றிகள் இடப்பட்டன. புல்டோசர்களினால் முன்காணிகள் மட்டமாக்கப்பட்டன. அதனால் இந்த முகாமிலிருந்து கோட்டையைப் பார்க்க முடிந்தது. 3000 இராணுவத்தினர் வரையில் இங்கு தங்கியிருந்தனர் எனக்கூறப்படுகின்றது.

மண்டைதீவில் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் பயங்கரமான நேரடி மோதல் நிகழ்ந்தது. இம்மோதலில் 44 போராளிகள் பலியாகினர். முகாம் சுற்றாடலில் வாழ்ந்த பொது மக்கள் பலர் காணாமல் போயினர். பத்துப் பேரின் சடலங்கள் காணப்பட்டன. ஒரு கிணற்றில் சுட்டுக்கொல்லப்பட்ட 43 பேரின் சடலங்கள் இடப்பட்டு அவற்றின் மேல் எரு வண் டிலோடு கவிழ்த்துவிடப்பட்டது. வீடுகள் இடிக்கப்பட்டன. ஒரு வீட்டில் தாய் ,சிறிய தாய் ஒரு மகள் ஆகியோர் இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனால் மனமுடைந்த தந்தை இன்னொரு மகளும் நஞ்சருந்தி மரணத்தைத் தழுவிக்கொண்டனர். வீடுகளில் தொங்கிய பெண்பிள்ளைகளின் படங்களில் குங்குமத்தால் திலகம் இடப்பட்டிருந்தது. பராசக்தி வித்தியாசாலை இருந்தவிடம் தெரியாமல் புல்டோசரால் தகர்த்து நீக்கப்பட்டது.


ஊர்காவற்றுறை , நாரந்தனை , புளியங்கூடல் , பள்ளப்பலம் வேலணை ஆகிய இடங்களில் முதல் மூன்று நாட்களில் மாத்திரம் 60க்கு மேற்பட்டோர் இராணுவத்தின் நடவடிக்கைகளால் கொலையுண்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். கொல்லப்பட்ட மக்களின் சடலங்கள் ஆங்காங்கு காணப்பட்டன. சில வைக்கோலிட்டு எரிக்கப்பட்டிருந்தன. பலர் வெட்டுக் காயங்களுக்குள்ளாகினர்.வேலணை மேற்கில் செ. செவ்வந்திநாதன் , அவரது மனைவி சொருபா , மகன் அம்பிகாபதி , ஆகியோர் பொம்பர் தாக்குதலினால் மரணமானார்கள். நாரந்தனையில் செ.பாலன் , எஸ்.மணவன் , பே.சிவகுமார் , பி.அன்ரனி ஆகியோர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இப்பகுதியில் மா. வசந்தகுமார் ,ச.அமுதலிங்கம் எஸ்.கிருஸ்ணபிள்ளை ஆகியோரும் கொலையுண்டவர்களாவர். காரைநகரில் கைகள் கட்டப்பட்ட நிலையில் ஒரு வயோதிபர் ஆறுநாட்களின் பின்னர் மீட்கப்பட்டார்.

ஒப்பரேசன் போர்ட் என்ற இந்த இராணுவ நடவடிக்கைக்கு ஜெனரல் கொப்பேகடுவ தலைமை தாங்கினார்.

இவற்றிற்கு மத்தியில் மண்டைதீவில் நிலைகொண்ட இராணுவம் யாழ் கோட்டையை நோக்கி நகர்வதற்கான சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்தது.

13 , செப்டம்பர் ,1990

யாழ்ப்பாண நகரப்பகு திக்கு மேலாக



வலம் வந்த வை 12 விமானம். காலை 5 மணிக்கேபீப்பாக் குண்டுகளை வீசத் தொடங்கி யது. சிறிது நேரத்தில் மண்டைதீவிலிருந்து யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கி நகரவிருந்த இராணுவத்திற்கு உதவியாகப் புலிகளின் நிலை எனக் கருதிய இடங் களில் கண்மூடித்தனமாகக் குண்டுகளை வீசியது.

இரண்டு கடற்படைப் பீரங்கிப் படகுகள் மண்டைதீவிற்குக் கிழக்குக் கரையில் சிறுதீவிற்கு அருகில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன. கோட்டைக் கரையை நோக்கி அவை குண்டுகளைக் கக்கத் தயார் நிலையில் இருந்தன.



காலை 5.55 காவலரண்கள் , கொத்தளங்கள் என்பனவற்றிலிருந்து புலிகளின் காவல் அரண்களை நோக்கித் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகம் ஆரம்பமாகியது. கோட்டையின் மூன்று பக்கங்களிலிருந்தும் வழமைக்கு மாறாகத் துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்த்தப்பட்டமை புலிகளின் கவனத்தை மண்டைதீவுப் பக்கமிருந்து திசை திருப்புவதற்காகவே என்பதைக் கணத்தில் புலிகள் புரிந்து கொண்டனர்.

சிறுதீவிலிருந்து பல விசைப்படகுகள் இராணுவ வீரர்களை நிரப்பிக்கொண்டு கோட்டையை நோக்கி வேகமாகப் புறப்பட்டு வருவதைப் புலிகள் அவதானித்துவிட்டனர். உடனடி யாக எல்லாக் காவலரண்களுக்கும் தகவல் பரிமாற்றப்பட்டது.புலிகள் துப்பாக்கிகள் , கடல் பக்கமாக விரைந்து வரும் விசைப்படகுகளை நோக்கித் திரும்பித் தயாராகின. படகுகள் புறப்பட்ட அதே நேரம் சிறுதீவுக் கடற் பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு பீரங்கிப் படகுகளும் குண்டுகளைப் பொழிந்தன. பொலீஸ் நிலையக் கட்டடத்தில் அமைக்கப்பட்டிருந்த காவலரணும் பண்ணைச் சந்திக் காவலரணும் இலங்கை விமானப்படையினதும் கடற்படையினதும் பிரதான இலக்குகளாக இருந்தன.

கோட்டைக்குள்ளிருந்தும் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இடைவெளியின்றிப் பீரங்கிக் குண்டுகளும் எறிகணைகளும் புலிகளின் காவலரண்கள் மீது வீசப்பட்டன. நிமிடத்திற்கு ஆயிரம் துப்பாக்கி ரவைகள் சரமாரியாகப் பாய்ந்தன.புலிகளின் சில காவலரண்கள் சரிந்தன.புலிகள் சிலர் செத்து விழுந்தனர். சிலர் காயமடைந்தபடி சரிந்தனர். எனினும் புலிகளின் மனவ லிமை குன்றவில்லை. கடலேரியூடாகக் கோட்டையை நோக்கி விரைந்து வரும் விசைப்படகுகளை நோக்கிப் புலிகளின் துப்பாக்கிகள்

**செங்கை ஆழியான்**

முழங்கத் தொடங்கின. துப்பாக்கிச் சன்னங்கள் பாயக் கூடிய எல்லைக்கு வந்ததும் ஒரே நேரத்தில் தம்மை நோக்கிச் சரம் தொடுத்த புலிகளின் துப்பாக்கிச் சன்னங்கள் இராணுவத்தினரை நிலைகுலைய வைத்தன.

ஒப்பறேசன் போர்ட் இராணுவ நடவடிக்கையில் கோட்டையைக் கைப்பற்றும் முயற்சியில் கஜபாகு றெஜிமென்ட்டைச் சேர்ந்த 1 , 4 , 6 படைப்பிரிவினரும் சிங்கறெஜி மென்ட்டைச் சேர்ந்த 1 படைப்பிரிவினரும் கெமுனு படைப்பிரிவினரும் பங்கு கொண்டனர். மண்டைதீவிலிருந்தும் சிறுதீவிலிருந்தும் பரவைக் கடலைக்கடந்து கோட்டைக்கரையை அடைவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவர்களுக்கு விமான கடற்படைகள் உதவின. 2000 இராணுவ வீரர்கள் பரவைக்கடலைக் கடக்கும் முயற்சியில் ஈடுபடுத்துவதற்கென விசேஷமாகத் பயன் படுத்தப்பட்டன. இவற்றில் ஏறிய இராணுவத்தினர் கோட்டையை நோக்கி வந்தனர். கோட்டையைச் சூழ்ந்திருந்த புலிகளின் காவலரண்கள் அனைத்தும் விமானக் குண்டு வீச்சுக்க ளால் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டன என்ற நம் பிக்கையுடன் விரைந்து வந்தனர். முதல் வந்த ஆறு விசைப்படகுகள் புலிகளின் தாக்குத லிற்குள்ளாகிச் சிதறின. பலபடகுகளிலி ருந்து இராணுவத்தினர். கடலிற்குள் குதித்து விட்டனர். சில படகுகள் வந்த வேகத்தில் திரும்பிச்சென்றன. இச்சந்தர்ப்பத்தில் பண்ணைச் சந்தியிலி ருந்து புலிகளின் பலமான காவலரண் விமா னத் தாக்குதலால் உடைக்கப்பட்டதை பயன் படுத்தி மூன்று விசைப்படகுகள் வரையில் அப்பகுதியில் கரையேறின.

(தொடரும்)

## இராணுவ வெற்றிவாரக் கொண்டாட்டம் நியாயமில்லை என்கிறது ஐ.தே.கட்சி

(கொழும்பு)

ஆயிரக்கணக்கான மக்கள் நிவாரண கிராமங்களில் சுதந்திரம் இன்றித் தவித்துக் கொண்டிருக்க மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இராணுவ வெற்றியை கோலாகலமாகக் கொண்டாடுகிறது.

ஓர் இனம் அந்நியப்படுத்தப்பட்டிருக்கையில் நாட்டின் வெற்றி எனக் கொண்டாடுவது எந்த வகையில் நியாயம்? என ஐக்கிய தேசிய கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், நாட்டுக்குச் சுதந்திரம்,விடுதலை கிடைத்துவிட்டதாக அரசாங்கம் கொண்டாட் டங்களை ஏற்பாடு செய்துள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் உள்ளவர்கள் இன்னும் மீள்குடியேற்றப்படவில்லை. அவர்களுக்கு சுதந்திரம் கொடுக்காமல் முழு நாட்டுக்கு மான விடுதலை என எவ்வாறு கூற முடியும்? தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை அரசாங்கம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றார்.

(6)

## நகர மற்றும் மாநகரசபை தேர்தல்கள் தொகுதிவாரியாக

(கொழும்பு)

நகர மற்றும் மாநகரசபைகளுக்கான தேர்தல்கள் மட்டும் தொகுதி வாரியாக நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. எனினும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களினதும் தேர்தல்களை தொகுதி வாரியாக நடத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

எனவே மாநகரசபை மற்றும் நகர சபைகளினது தேர்தல்களை மட்டும் தொகுதி வாரியாக நடாத்தி ஏனைய பிரதேச சபைகளினது தேர்தல்களை வழமையான விருப்பு வாக்கு தெரிவு முறையில் நடாத்த உத்தே சிக்கப்பட்டுள்ளது.

தொகுதி வாரி அடிப்படையில் ஒரு கட்சியிலுருந்து ஒரு வேட்பாளர் மட்டுமே போட்டியிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

14 மாநகர சபைகளுக்கு 38 நகர சபைகளுக்கும் இவ்வாறு தேர்தல் நடத்தப்படவுள்ளது.

(6)

# எம்.எஸ்.ஒபீஸ் -2010 புதுமைகள்

கோடிக்கணக்கான மக்கள் ஒவ்வொரு நாளும் ஒரு முறையாவது மைக்ரோசொப்ட் ஒபீஸ் தொகுப்பின் புரோகிராம் ஒன்றைப் பயன்படுத்துகின்றனர் என்று கூறினால் அது மிகையாகாது. சிறிய, பெரிய நிறுவனங்கள் கல்லூரிகள் வீடுகள் என எங்கும் எம்.எஸ்.ஒபீஸ் தொகுப்பின் புதிய பதிப்பு 2010 பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. அண்மையில் இதன் வளர்ச்சி குறித்து தொடர்புள்ளவர்களுக்கு மட்டும் (மைக்ரோசாப்ட் டெக்நெட் மற்றும் எம்.எஸ். டி.என். சந்தாதாரர்களுக்கு மட்டும்) இது டவுண்லோட் செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. இத்தொகுப்பின் வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது.

வர்த்தக ரீதியாக பொது மக்களுக்கு அடுத்த மாதம் கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எந்த திகதியிலிருந்து என இன்னும் அறிவிப்பு வரவில்லை. இத் தொகுப்பு குறித்த கூடுதல் தகவல்கள் கிடைத்துள்ளன. அவற்றை இங்கு காணலாம்.

ஒபீஸ் 2010 மிக ஆழமாக மேற்கொள்ளப்பட்ட சிந்தனையில் நுண்மையாக வடிவமைக்கப்பட்டு பல சொப்ட்வெயர் புரோகிராம்கள் இணைப்பாக அமைக்கப்பட்ட ஒரு பெருந்தொகுப்பாகும். இந்த தொகுப்பில் மையமாகத் தரப்படும் வேர்ட் எக்ஸெல் அவுட்லுக் மற்றும் பிரசன்டேஷன் புரோ கிராம்கள் இன்றைய தேவைகளின் அடிப்படையில் புதிய மாற்றங்களைக் கொண்டுள்ளவையாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

முந்தைய ஒபீஸ் தொகுப்புகளுடன் ஒப்பிடுகையில், இத் தொகுப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் சிறப்பினைக் காணலாம். ஒபீஸ் 2007 தொகுப்பில் ரிப்பன் இன்டர்பேஸ் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால் முழுமையாக அனைத்து தொகுப்புகளுடனும் தரப்படவில்லை. அவுட்லுக், ஒன் நோட் மற்றும் பப்ளிஷர் தொகுப்புகளில் ஒபீஸ் 2003 இல் இருந்த மெனுவே தொடர்ந்தது. ஆனால் ஒபீஸ் 2010 இல் அனைத்துமே ரிப்பன் இன்டர் பேஸுக்கு மாறிவிட்டன.


குறிப்பாக அவுட்லுக் தொகுப்பில் முன்புகிடைக்கப்பெற்றிருந்த சில வசதிகள் அனைத்தும் ரிப்பன் இன்டர்பேசில் எளிமையாகப் பெறும்வகையில் அமைக்கப்பட்டுள்ளன. (தகவல்கள் வரும்)

# கூகுள் கலண்டர் உங்கள் நண்பன்

" கிளவுட் கொடம்ப்யூட்டிங்" குறித்து இப்போது அதிகம் பேசப்படுகிறது. இணையத்தளம் மூலமாக, நாம் இணையத் தொடர்பில் இருந்தவாறே, புரோகிராம்களைப் பயன்படுத்தி, நம்செயற்பாடுகளை மேற்கொள்வதே " கிளவுட் கொம்ப்யூட்டிங். இந்த வசதிகளை நமக்குத் தருவதற்கு சேர்வர்களை நிறுவி சேவை செய்திடும் நிறுவனங்கள், நம்மிடம் கட்டணம் பெறுகின்றன. சிறிய சில உதவிகளை, சேவைகளைத் தருவதற்குப் பல நிறுவனங்கள் நம்மிடம் கட்டணம் வாங்காமலேயே இயங்குகின்றன.

ஒன்லைன் ஸ்டோரேஜ், ஒன்லைன் கொன்வேர்டர்கள் போன்றவை இந்த " கிளவுட் கொம்யூட்டிங் வகையைச் சேர்ந்தவைதான்.

இந்த வகையில் கூகுள் நீண்டகாலமாக பல சேவைகளினைத் தந்து வருகிறது. அவற்றில் மிகவும் பயனுடையதும், இன்றைய காலத்திற்குத் தேவையானதுமான ஒன்று, கூகுள் கலண்டர் . இது வெறும் நிகழ்வுகளைக் குறித்து வைத்துச் செயல்படும் கலண்டர் மட்டுமன்றி, இதன் சேவை இப்போது மொபைல் போனையும் இணைத்து நமக்குக் கிடைக்கிறது என்பது பலருக்குத் தெரிவதில்லை. இந்த இலவச சேவையை எப்படிப் பெறுவது என்று பார்க் கலாம்.



இதற்கு முதல் சேவை ஜிமெயிலில் ஒரு எக்கவுண்ட்.பின் இதனைப் பயன்படுத்தி கூகுள் கலண்டர் தளத்திற்குச் செல்லவும். அதில் செட்டிங்ஸ் (Settings) என்பதில் கிளிக் செய்திடவும்.

அதன்பின் அங்கு கிடைக்கும் டேப்களில் மொபைல் செட் டேப்பில் (Setup) கிளிக் செய்திடவும்.

இதில் உங்கள் மொபைல் எண்ணை என்டர் செய்திட வேண்டும். அதன்பின் Send Verification Code என்பதில் கிளிக் செய்து காத்திருங்கள். உங்கள் மொபைல் போன் எண் சோதனை செய்யப்பட்டு அந்த போனு க்கு ஒரு மெசேஜ் அனுப்பப்படும்.

சில நொடிகளில் கிடைக்கும் இந்த செய் தியில் Your Google calendar verification code is என ஒரு எண் தரப்படும்.இதுதான் உங்கள் கூகுள் கலண்டர் எக்கவுண்ட் டுக்கான பாஸ்வேர்ட்.

அடுத்து கூகுள் கலண்டரில் வரும் நாட்களுக்கான நிகழ்வுகளை முன்கூட்டியே குறித்து வைக்கலாம். எடுத்துக்காட்டாக மே மாதம் 22 அன்று,மாலை 5 மணிக்கு ஒரு திருமண வரவேற்பில் கலந்துகொள்ள வேண்டும் என்றால், அதனைச் சுருக்கமாக எழுதி வைக்கலாம்.

இதுகுறித்து செய்தி உங்களுக்கு அந் நாளில், நிகழ்ச்சிக்கு எவ்வளவு நேரம் முன்னால் உங்கள் போனுக்கு எஸ்.எம்.எஸ் ஆகவும், இமெயிலுக்கு செய்தியாகவும் அனுப்பப்பட வேண்டும் என்பதனைக் குறிக் கலாம். 30 நிமிடத்திற்கு முன் அல்லது ஒரு நாளுக்கு முன் எனக் குறித்தால், சரியான அந்த நேரத்திற்கு உங்களுக்கு எஸ்.எம்.எஸ் செய்தி கிடைக்கும்.ஜிமெயிலுக்கு இமெயில் செய்தி அனுப்பப்படும்.

உங்கள் கூகுள் கலண்டரில் குறித்து வைத்த தகவல்களை நீங்கள் மட்டும் பார்க்குமாறு வைக்கலாம் அல்லது உங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் தெரிந்து கொள்ளுமாறும் செட் செய்திடலாம்.

இதனால் உங்கள் நாட்குறிப்பினை நீங்கள் எங்கிருந்தாலும், இணையத்தின் மூலம் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். உங்கள் தனிப்பட்ட வாழ்க்கைக்கு ஒன்றும், வர்த்தக மற்றும் அலுவலக நடவடிக்கைகளுக்கு ஒன்றும், நண்பர்களுக்காக ஒன்றும் என எத்தனை கலண்டர்களை வேண்டுமானாலும் வடிவமைத்து வைத்துக் கொள்ளலாம்.

இந்த கலண்டரிலேயே தேடல் வசதி தரப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி என்று நடைபெற உள்ளது என மறந்துவிட்டால்,இதன்மூலம் தேடி அறியலாம். இது ஒரு இணைய வழிச்செயல்பாடு என்பதால், எந்த ஒப்பரேட்டிங் சிஸ்டம் இயங்கும் கணனியில் இதனைக் காணலாம்.

அதேபோல எந்த பிரவுசர் வழியாகவும் பெறலாம். இந்தசேவை முழுவதும் இலவசமே. கட்டணம் இல்லை என்பது இதன் சிறப்பு. இதனை ஒரு முறை பயன்படுத்தினால், தொடர்ந்து உங்கள் அன்றாட வாழ்க்கையில், உங்களை வழிநடத்தும் நம்பிக்கையான நண்பனாக கூகுள் கலண்டர் மாறுவதனைக் காணலாம்.

கூகுள் கலண்டர் செட்டிங்ஸ் அமைப்பில் லப்ஸ் என்பதைக் கிளிக் செய்து, இன்னும் என்ன வழிகளில், கூகுள் கலண்டரை நம் உற்ற வழிகாட்டியாக மாற்றலாம் என்பதனைத் தெரிந்துகொள்ளலாம்.




# டெஸ்க்டொப்பில் ஐகன்கள் அதிகமா?

மனம் போன போக்கில் டெஸ்க்டொப்பில் போல்டர்கள் மற்றும் பைல்களை சேவ் செய்து வைப்பது நம்மில் பலரிடையே இருக் கும் மோசமான பழக்கமாகும். இதனால் டெஸ்க்டொப்பில் தேவையற்ற ஐகன்கள் சிதறிக் கிடக்கும்.

ஒரு சிலர் தங்களுக்குப் பிடித்தவரின் புகைப்படங்கள் அல்லது தன்னுடைய படங்களை, வணங்கும் தெய்வத்தின் படங்களைத் திரையில் டெஸ்க்டொப்பில் வைத்திருப்பார்கள். இந்த தேவையற்ற ஐகன்கள் அந்தப் படங்களில் உள்ளவரின் முகத்தில், கண்களை அல்லது வேறு பகுதிகளின் மேலாக அமர்ந்து படத்தையே அசிங்கப் படுத்தும் வகையில் இருக்கும்.

இதில் பெரும்பாலான ஐகன்கள் பயன்படுத்தப்படாமலேயே (வெகுநாட்கள் அல்லது மாதங்கள்) இருக்கும். சிலர் டவுண்லோட் செய்கையில் எங்கு டவுண்லோட் செய்தோம் என்று தெரிய டெஸ்க்டொப்பிலேயே அவற்றை சேவ் செய்து வைப்பார்கள். பின்னர் அவற்றை வேறு சார்ந்த ரைவிற்கு கொண்டு சென்றாலும் டெஸ்க்டொப்பில் இருக்கும் ஐகனை அழிக்க மறந்துவிடுவார்கள். இதுவும் டெஸ்க்டொப்பில் குவியும் ஐகன்களின் எண்ணிக்கைக்கு ஒரு காரணமாகும்.

இதனை எப்படி சீர் செய்திடலாம். டெஸ்க்டொப்பிலேயே சில போல்டர்களை உருவாக்கலாம். இதில் பயன்படுத்ததாத ஐகன்களை (Unused Icons) என்ற போல்டரை உருவாக்கி போட்டு வைக்கலாம். பேர்சனல் தகவல்கள் உள்ள பைல்களை மற்றும் இன்டர்நெட் சார்ந்து இயக்கப்படும் பைல்களை இன்டர்நெட் என்று பெயரிட்டு ஒரு போல்டரில் வைக்கலாம்.

அடிக்கடி அன்றாடம் பயன்படுத்தும் பைல்களை அப்டேட் என்ற பெயரில் ஒரு போல்டரில் வைக்கலாம். இதன் மூலம் ஐகன்களின் எண்ணிக்கை குறைக்கப்படும்.

டெஸ்க்டொப் சுத்தமாக அழகாகக் காட்சி தருவதுடன் இந்த ஐகன்களுக்கான பைல்களைத் தேடி எடுப்பதும் விரைவாக நடைபெறும்.

ஐகன்கள் டெஸ்க்டொப்பில் குவியும் போது விண்டோஸ் இதற்கென ஒரு நினைவூட்டும் செய்தியைத் தரும். அதற்கென ஒரு மெசேஜைக் காட்டி இவற்றை எல்லாம் எடுத்து விடவா என்று கேட்கும். நம்மில் பலர் அந்த மெசேஜை அலட்சியப்படுத்திவிடுவோம்.

ஏனென்றால் இந்த வேலை மிகவும் முக்கியமாக்கும் என்ற எண்ணம் தான் நம் நினைவில் ஓடும். பயன்படுத்துகிறோமோ இல்லையோ இந்த ஐகன்கள் அப்படியே இருக்கட்டுமே என விட்டுவிடுவோம். விண்டோஸ் கொடுக்கும் மெசேஜைப் பின்பற்றினால் அதுவாகவே வெகுநாட்கள் பயன்படுத்தாமல் இருக்கும் ஐகன்களை ஒவ்வொன்றாகக் காட்டி வேண்டுமா நீக்கவா என்று கேட்டு சரி செய்திடும். மேலே சொன்ன வழிகளில் ஒன்றைப் பின்பற்றி டெஸ்க்டொப்பினைச் சுத்தமாக வைத்திருப்பது என்றும் நல்லது.

# குவிந்த புரோகிராம்களை நீக்க

இணையத்தில் பல்வேறு வசதிகளைத் தரும் எக்கச்சக்கமான புரோகிராம்கள் இலவசமாகக் கிடைக்கின்றன. இவை இலவசமாகக் கிடைப்பதால், நாம் உடனே டவுண்லோட் செய்து பயன்படுத்திப் பார்க்கிறோம். ஆனால் சில நாட்களில் அதனை மறந்துவிடுகிறோம்.தொடர்ந்து பயன்படுத்துவதில்லை. இப்படி பல புரோகிராம்கள் நம் கம்ப்யூட்டரில் தங்கிவிடுகின்றன. இவற்றை எப்போதாவது, கண்ட்ரோல் பேனல் சென்று, ஆட்/ரிமூவ் பிரிவின் மூலம் ஒரு சிலவற்றை நீக்குகிறோம். அப்படி நீக்கும்போதும், அந்தப் புரோகிராம் சார்ந்த சில ரெஜிஸ்ட்ரி வரிகள் தங்கிவிடுகின்றன. சில பைல்களும் அவ்வாறே கம்ப்யூட்ரில் வைக்கப்படுகின்றன. இதனால் கம்ப்யூட்டரின் செயல் வேகம் மெதுவாகிறது. சில மோசமான வேளைகளில், புரோகிராம்கள் முடங்கியும்போகின்றன.


இதுபோன்ற குறைகளை நீக்கித் தேவையற்ற புரோகிராம்களை முழுமையாக நீக்க இணையத்தில் Absolute Uninstaller என்ற புரோகிராம் கிடைக்கிறது. இது ஆட்/ரிமூவ் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை மேற்கொண்டாலும், அதனைக் காட்டிலும் கூடுதல் திறனுடன் செயல்படுகிறது. தேவையற்ற ரெஜிட்ரி கீகள், சார்ந்த டெஸ்கட் டாப் ஐகன்கள் , ஸ்டார்ட் மெனுவில் எழுதப்பட்ட என்ட்ரிகள் ஆகியவற்றைக் கண்டறிந்து நீக்குகிறது. இந்தப் புரோகிராம், சாப்ட்வேர் அப்ளிகேஷன் ஒன்றை நீக்கும்போது, அழிக்காமல் விடப்படும் பைல்களைக் கண்டறிந்து முழுமையாக அழிக்கிறது. தானாகவே தேவையற்ற பைல் என்ட்ரிகளின் இடமறிந்து காட்டுகிறது. இன்ஸ்டோல் செய்யப்பட்ட புரோகிராம்களை, அவற்றிற்கான ஐகன்களுடன் தெரிவிக்கிறது.இதன்மூலம் நாம் நீக்கப்பட வேண்டிய புரோகிராம்களை எளிதாகத் தேர்ந்தெடுக்கலாம். தேர்ந்தெடுக்கும் வகையில் அவற்றின் முன் டிக் அடையாளம் ஏற்படுத்தி, பின் நீக்குவதற்கான கட்டளை கொடுத்தால், மொத்தமாக, அவற்றின் சுவடே இல்லாமல நீக்குகிறது. பொதுவாக ஆட் /ரிமூவ் புரோகிராம் செயல்பட சற்று நேரம் பிடிக்கும், அப்ஸல்யூட் அன் இன்ஸ்டாலர் மிக் வேமாகச் செயல்படத் தொடங்குகிறது. அத்துடன் அதன் இன்டர்பேஸ்மகி எளிதாக இதனை இயக்கும்வகையில் அமைக்கப்பட்டுள்ள.

**இந்தவார இணையத்தளம்**

இதனை http://www.glarysoft.com/absoluteuninstaller என்ற முகவரியில் உள்ள தளத்தில் சென்று டவுண்ட்லோட் செய்து கொள்ளுங்கள். அண்மையில் இதன் புதிய பதிப்பு Absolute Uninstaller 2.8.0.636 வெளியாகியுள்ளது.

# பார்வதி அம்மாள் தமிழகம் வர விருப்பமில்லாமல் இலங்கை சென்றாரா?

## கலைஞர் விளக்கம்



பிரபாகரன் தாயார் பார்வதியம்மாள் சிகிச்சைக்காக மலேசியாவில் இருந்து சென்னை வந்தார். அவர் விமான நிலையத்திலேயே திருப்பி அனுப்பப்பட்டார். இதனால் உலகத்தமிழர்கள் பார்வதி அம்மாளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தனர்.

இதையடுத்து பார்வதி அம்மாளுக்கு தமிழகத்தில் சிகிச்சையளிக்க அனுமதி தர வேண்டும் என்று மத்திய அரசுக்கு தமிழக அரசு தரப்பில் முதல்வர் கருணாநிதி கடிதம் எழுதியிருந்தார்.

இதற்கு தமிழக அரசுக்கு பதில் கடிதம் அனுப்பியது மத்தியஅரசு. அக்கடிதத்தில் , பார்வதி அம்மாள் மீதான தடை நீக்கப்படும். அவர் இந்தியா வருவதற்கு 6மாத கால விசா வழங்கப்படும். அவர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டால் அவருக்கு தேவையான வசதிகளை தமிழக அரசு செய்து தரவேண்டும். அவர் மருத்துவமனையை விட்டு வேறு எங்கும் செல்லக்கூடாது. அரசியல் கட்சியினர் மற்றும் தடை செய்யப்பட்ட இயக்கத்தினரோடு தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்கண்ட இந்தத் தகவலை நேற்று முன்தினம் சட்டமன்றத்தில் 110 தீர்மானத்தின் கீழ் முதல்வர் கருணாநிதி அறிவித்தார்.

இதையடுத்து பார்வதி அம்மாள் தமிழகம் வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நேற்று முன்தினம் மாலை பார்வதி அம்மாள் மலேசியாவிலிருந்து இலங்கை சென்றுவிட்டார் என்று செய்தி வந்தது.கடும் நிபந்தனைகளால் தமிழகம் வர விருப்பமில்லாததால் தான் அவர் இலங்கை சென்று விட்டார் என்றும் செய்திகள் வந்தன.

இந்த செய்திகளுக்கு முதல்வர் கருணாநிதி சட்டசபையில் விளக்கம் அளித்தார்.

அவர், பிரபாகரன் தாயார் பார்வதி அம்மாளின் பாதுகாப்புக் கருதியே மத்திய அரசு சில நிபந்தனைகளுடன் சிகிச்சையளிக்க உத்தரவிட்டது.கடும் நிபந்தனைகள் எதுவும் விதிக்கப்படவில்லை.

தமிழக அரசுக்கு பார்வதி அம்மாளிடம் இருந்து நிராகரிப்பு செய்தி வரவில்லை .அவர் தமிழகத்திற்கு சிகிச்சை பெற மறுப்பு தெரிவிக்கவில்லை என்று தெரிவித்தார். (6)




# ஆந்திராவில் வெயிலுக்கு 13 பேர் பலியாகினர்

(பள்ளிப்பட்டு)

ஆந்திராவில் கம்மம், கரீம் நகர், கர்னூல், அனந்தபுரம் மாவட்டங்களில் வரலாறு காணாத அளவுக்கு வெயில் சுட்டெரிக்கிறது. கம்மம் அடுத்த கொத்த கூடம் பகுதியில் அதிகபட்சமாக 118 டிகிரி வெயில் சுட்டெரிக்கிறது. கரீம் நகரில் 114 டிகிரி கொளுத்துகிறது.

இதனால் இம்மாவட்டங்களில் பொது மக்களால் வெளியில் நடமாட முடியவில்லை. இதையும் மீறி வெளியில் செல்வோருக்கு மயக்கம் ஏற்படுகிறது.

மெகபூப் நகர் மாவட்டத்தில் 2 பேர், கம்மத்தில் 4 பேர், கர்னூலில் 2 பேர், நல்கொண்டாவில் ஒருவர் உள்பட 13 பேர் வெயிலுக்கு பலியாகி உள்ளனர். (6-4)

# இந்தியா -பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்களிடையே பேச்சுவார்த்தை

## யூலை 15இல் ஆரம்பம்

இந்தியாவை சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு பாகிஸ்தான் அழைத்துள்ளதாக சர்வதேச ஊடகமொன்று செய்திவெளியிட்டுள்ளது. எதிர்வரும் ஜூலை மாதம் இரு நாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2008 ஆம்ஆண்டு மும்பை தாக்குதல்களை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தடைப்பட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா தெரிவித்துளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இஸ்லாமாபாத்தில் நடைபெறவுள்ளதாகவும், தமது இந்த விஜயம் சாதகமான பெறுபேறுகளுக்கு வழிகோலும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷா மெஹ்மூடிற்கும், இந்திய வெளிவிகார அமைச்சருக்கும் இடையில் தொலைபேசி உரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இதன் போதுஎதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம்திகதி பாகிஸ்தானுக்கான விஜயம் செய்வதாக எம்.எஸ்.கிருஸ்ணா உறுதியளித்துள்ளார்.

இந்திய வெளிவிகார அமைச்சர் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டதன் பின்னர் தாம் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக பாகிஸ்தான் வெளிவிகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (6-4)

# செங்கல்பட்டில் இலங்கை தமிழர்கள் உண்ணாவிரதம்

செங்கல்பட்டில் உள்ள கிளை சிறையில் இலங்கை தமிழர்கள் 17 பேர் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஆயுத கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள். பல ஆண்டுகளாக சிறையில் உள்ளனர்.

இவர்களில் 10 பேர் தங்களை விடுவிக்க வேண்டும் என்று கூறி நேற்று முன்தினம் முதல் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். நேற்று 2 ஆவது நாளாக உண்ணாவிரதம் தொடர்ந்து நடந்து வருகிறது.

செங்கல்பட்டு சிறையில் கடந்த பெப்ரவரி மாதம் 2 ஆம் தேதி பொலிஸார் இலங்கை தமிழர்களை தாக்கியதாக புகார் கூறப்பட்டது. இது தொடர்பாக மேல் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

இதுபற்றி நீதவான் விசாரணைக்கு உத்தரவிட்டார். இது குறித்து நீதவான் நேரில் சென்று விசாரணை நடத்த இருக்கிறார். இந்நிலையில் இலங்கை தமிழர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறிப்பிடத்தக்கது. (6)

# பார்வதி அம்மாள் விவகாரம் ; — விஜயகாந்த் வேதனை —



விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளை இந்தியாவில் மருத்துவ சிகிச்சை அளிக்கும் விவகாரத்தில் மத்திய மாநில அரசுகள் வேதனைப்படுத்தும் விதமாக நடந்து கொள்கிறது என்று தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் ,

அன்றைய அ.தி.மு.க அரசின் தடை செய்தோர் பட்டியலில் பார்வதி அம்மாள் பெயர் இருந்தது என்றால், அதைத் தெரியாமலேயே மலேசியாவில் உள்ள இந்தியத் தூதரகம் அனுமதி வழங்கியது எப்படி?

இதுகுறித்து தூதரக அதிகாரிகள் விசாரணை நடத்தாமல், தான் வழங்கிய விசாவை இந்திய அரசே மறுக்கலாமா?

சிகிச்சைக்கு அனுமதிக்க மத்திய அரசிடம் தமிழக அரசு நிபந்தனைகளுடன் அனுமதி கேட்டதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பார்வதி அம்மாளுடைய விவகாரத்தில் மத்திய மாநில அரசுகள் கையாளும் நடவடிக்கைகள் நம்பத்தகுந்தவையாக இல்லை என்று தெரிவித்துள்ளார். (6)

# தமிழர் பகுதிகளில் நிவாரண பணிகளுக்கு — இந்தியா ரூ. 1900 கோடி உதவி —

தமிழர் பகுதிகளில் அகதிகளுக்கு நிவாரணப் பணிகள் மற்றும் நலத் திட்டங்களை நிறைவேற்ற இலங்கைக்கு மத்திய அரசு ரூ.1900 கோடி வழங்குகிறது.

டெல்லியில் நடந்த ஒரு விழாவில் கலந்து கொண்ட போது மத்திய வெளி உறவுத்துறை செயலாளர் நிருபமா ராவ் இந்த தகவலை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், ஏற்கனவே இந்தியா ரூ 500 கோடி வழங்கி இருக்கிறது.

இடம் பெயர்ந்து அவதிப்படும் தமிழர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டியது இலங்கை அரசின் கடமை என்றார். (6-4)

# ஐஸ்வர்யா,அபிஷேக் பச்சன் இலங்கைப் பயணம் இரத்து

(கொழும்பு)

கொழும்பில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவில் நடிகை ஐஸ்வர்யா ராய் பங்கேற்கமாட்டார் என்று கூறப்படுகிறது.

கேன்ஸ் திரைப்பட விழாவில் ஐஸ்வர்யா ராய் பங்கேற்கவிருப்பதாலும் வேறு சில காரணங்களாலும் அவர் விழாவில் பங்கேற்க மாட்டார் என்று கூறப்படுகிறது.

அமிதாப்பச்சன், ஐஸ்வர்யா ராய், அபிஷேக் பச்சன், ஷாருக்கான் ஆகியோர் கொழும்பு விழாவில் பங்கேற்பதை யாராலும் தடுக்க முடியாது என்று இலங்கை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து அமிதாப் குடும்பம் இலங்கையில் நடக்கும் விழாவில் பங்கேற்கக்கூடாது என்று கோரி தமிழ் அமைப்புகள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளன. சீமானின் நாம் தமிழர் அமைப்பு இன்று மும்பையில் உள்ள அமிதாப் வீட்டின் முன்பு காலவரையற்ற உண்ணா விரதத்தைத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் ஐஸ்வர்ய ராய், அபிஷேக் பச்சன் ஆகியோர் இலங்கை செல்லும் திட்டத்தில் இல்லை என்றும் ஐஸ்வர்யாராய் கேன்ஸ் திரைப்பட விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார் என்றும் கூறப்படுகின்றது.

கடந்த சில ஆண்டுகளாக கேன்ஸ் திரைப்பட விழாவின் தொடக்க நாள் நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினராக ஐஸ்வர்யாராய் பங்கேற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# கேரளாவில் கைதான இலங்கை அகதிகளை தமிழகப் பொலிஸாரிடம் ஒப்படைக்க முடிவு

(திருவனந்தபுரம்)

கொல்லத்தில் பிடிபட்ட இலங்கை அகதிகளை தமிழகப் பொலிஸாரிடம் ஒப்படைக்க கேரள பொலிஸார் முடிவுசெய்துள்ளனர்.

கொல்லத்தில் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்த இலங்கையைச் சேர்ந்த 38 பேர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர். விசாரணையில் அவர்களை கடத்தி அவுஸ்திரேலியாவில் கொத்தடிமைகளாக விற்கமுயன்றது தெரியவந்தது. இதுதொடர்பாக டென்னிச் என்றமுகவரை பொலிஸார் கைது செய்தனர். இதில் தொடர்புடைய மேலும் சிலரை பிடிக்க சர்வதேச பொலிஸார் உதவி கேட்டு மத்திய உள்துறை கடிதம் எழுதியுள்ளது.

இந் நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மத்திய உளவுத்துறை மற்றும் இலங்கையைச் சேர்ந்த தீவிரவாத தடுப்பு பொலிஸார் கொல்லத்தில் 37 அகதிகளிடமும் விசாரணை நடத்தினர். இதில் இவர்களுக்கு விடுதலைப் புலிகளுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து அவர்களை தமிழகப் பொலிஸாரிடம் ஒப்படைக்க கேரள பொலிஸார் முடிவுசெய்துள்ளனர்.அவர்கள் இராமேஸ்வரத்தில் உள்ள அகதிகள் முகாமில் தங்க வைக்கப்படுவார்கள் எனத் தெரிகிறது. (6-4)



உ.பி., அமேதி, ஷாகரில் நடைபெற்ற கண்பரிசோதனை முகாமை காங்கிரஸ், எம்.பி., ராகுல், மைக்ரோசொப்ட் நிறுவனத் தலைவர் பில்கேட்ஸ் ஆகியோர் பார்வையிட்டனர்.

# பிரிட்டனில் 65 ஆண்டுகளுக்கு பின் கூட்டணி ஆட்சி; புதிய பிரதமராக டேவிட் கெமரூன் பதவியேற்கிறார்



(லண்டன்)

பிரிட்டனில் 65 ஆண்டுகளுக்குப் பிறகு கூட்டணி ஆட்சி அமைகிறது. இதன் புதிய பிரதமாக டேவிட் கெமரூன் பதவி ஏற்கிறார்.

சமீபத்தில் பிரிட்டனில் பாராளுமன்ற தேர்தல் நடந்தது. இதில் எந்தக் கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. கன்சர் வேடிவ்கட்சி தனிப்பெரும் கட்சியாக அதிக இடங்களில் வெற்றி பெற்றது.

13 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்து தொழிலாளர் கட்சி 2 ஆவது இடத்தை பிடித்தது. இதற்கு அடுத்தபடியாக லிபரல் ஜனநாயக கட்சி 3 ஆவது இடத்தை பெற்றது.

எனவே தனிப்பெரும் கட்சியாக திகழும் கன்சர் வேடிவ் கட்சி லிபரல் ஜனநாயக கட்சியுடன் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டது. எனவே இக்கட்சிகளின் பிரதிநிதிகள் குழு அமைக்கப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து கன்சர்வேடிவ் கட்சி தலைவர் டேவிட் கெமரூன் லிபரல் ஜனநாயக கட்சி தலைவர் நிக்கிளெக் ஆகியோரும் தொலைபேசி மூலமும் நேரிலும் சந்தித்து பேசினார்கள். இதற்கிடையே தொழிலாளர் கட்சியும் கூட்டணி ஆட்சி அமைக்க முயற்சி செய்தது.

அக்கட்சியின் தலைவரும் பிரதமருமான கோர்டன் பிரவுன் லிபரல் ஜனநாயக கட்சி தலைவர் நிக்கிளெக்குடன் மறைமுகமாக பேச்சு நடத்தினார். ஆனால் அவரது முயற்சி பலிக்கவில்லை.

கன்சர்வேடிவ் கட்சிக்கும் லிபரல் ஜனநாயக கட்சிக்கும் இடையே ஆட்சி அமைப்பது குறித்து உடன்பாடு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து இக்கட்சிகளின் கூட்டணி ஆட்சி அமைக்கிறது.

கூட்டணி ஆட்சியின் புதிய பிரதமராக டேவிட் கேமரூன் தேர்வு செய்யப்பட்டார். துணை பிரதமர் பதவி நிக்கிளெக்குக்கு வழங்கப்படவுள்ளது. புதிய அமைச்சரவைக்கு மந்திரிகளை இரு கட்சி தலைவர்களும் தேர்ந்தெடுத்து வருகின்றனர்.

எனவே பிரதமர் பதவியை ராஜினாமா செய்ய கோர்டன் பிரவுன் முடிவு செய்தார். டவினிங் தெருவில் உள்ள தனது வீட்டில் இருந்து புறப்பட்டு பக்கிங்காம் அரண்மனைக்கு சென்றார். ராணி எலிசபெத்தை சந்தித்து தனது ராஜினாமா கடிதத்தை கொடுத்தார். அதை அவர் ஏற்றுக்கொண்டார்.

இதையடுத்து பிரிட்டனில் 13 ஆண்டு கால தொழிலாளர் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதைத்தொடர்ந்து புதிய பிரதமராக பதவி ஏற்க டேவிட் கெமரூனுக்கு ராணி எலிசபெத் அழைப்பு விடுத்தார். அதை ஏற்று




அவரை கெமரூன் சந்தித்தார். அப்போது அவருக்கு ராணி எலிசபெத் வாழ்த்து தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து புதிய பிரதமராக பதவி ஏற்க உள்ள டேவிட் கெமரூன் திரண்டிருந்த மக்கள் மத்தியில் பேசினார். அப்போது பெரிய அளவிலான பற்றாக்குறை பட்ஜெட்டை சமாளிக்க கூடிய சூழ்நிலையில் இருப்பதாகவும் பொருளாதாரத்தை சீரமைக்க வேண்டிய நிலையில் இருப்பதாகவும் கூறினார்.

இது ஒரு கடுமையான பணி என்றும் கூட்டணி அரசின் துணை கொண்டு அதை சமாளிப்பேன் என்றும் தெரிவித்தார்.

மக்களுக்கு நிலையான பலம் வாய்ந்த அரசை வழங்குவேன் என்றும் உறுதி அளித்தார். பிரிட்டனில் கடந்த 1945 ஆம் ஆண்டுக்கு பிறகு அதாவது 65 ஆண்டுகளுக்கு பிறகு கூட்டணி ஆட்சி அமைகிறது.

200 ஆண்டுகளுக்கு பிறகு பிரிட்டனில் பதவி ஏற்கும் இளம் வயது பிரதமர் என்ற பெருமையை டேவிட் கெமரூன் பெறுகிறார். தற்போது இவரது வயது 43.

பிரதமராக பதவி ஏற்க உள்ள டேவிட் கெமரூனுக்கு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மெக்கெல், பிரான்ஸ் அதிபர் நிகோலஸ் சர்கோஷி ஆகியோர் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தனர். (6-4)

## மொபைல் போனில் பாகன்கள் இடும் கட்டளைப்படி நடந்து கொள்ளும் யானைகள்

### ஜப்பான் உயிரியல் பூங்காவில் அதிசய சம்பவம்

(கோல்கட்டா)

ஜப்பான் உயிரியல் பூங்காவில் உள்ள இரண்டு இந்திய யானைகள் மொபைல் போனில் பாகன்கள் கட்டளை படி நடந்து கொள்ளும் அதிசய சம்பவம் நடந்து வருகிறது.

மேற்குவங்க சரணாலயத்தில் பிறந்த தேவி, ராகுல் என்ற இரண்டு யானைகள் ஜப்பானில் உள்ள ஒகினவா உயிரியல் பூங்காவிற்கு கடந்த 2007 ஆம் ஆண்டு பரிசாக வழங்கப்பட்டன.

ஜப்பான் உயிரியல் பூங்காவிற்கு இரண்டு யானைகள் பரிசாக அனுப்பப்பட்ட போது இரண்டு பாகன்களும் உடன் சென்று சிறிது நாட்கள் தங்கியிருந்து யானைகளை பழக்கிய பின் நாடு திரும்பினர். இதற்கு பின் ஒகினவா பூங்கா ஊழியர்களுக்கு பிரச்சினை உருவானது. பூங்கா ஊழியர்களின் கட்டளைகளுக்கு தேவி, ராகுல் யானைகள் கட்டுப்படவில்லை. உணவு உண்ணவில்லை. சோகமே உருவாக மாறின.

பிரச்சினை குறித்து ஆராய்ந்த பூங்கா ஊழியர்களுக்கு ஜப்பான் மொழியில் அவர்கள் இடும் கட்டளைகள் யானைகளுக்கு புரியாமல் அவ்வாறு நடந்து கொள்வதை கண்டறிந்தனர்.

செய்வதறியாது தவித்த அவர்களுக்கு யோசனை ஒன்று தோன்றியது. மேற்கு வங்கத்தில் உள்ள பாகன்களிடம் நிலைமையை எடுத்து கூறினர். யானைகளுடன் மொபைல் போனில் பேசுமாறு பாகன்களிடம் கூறினர். பாகன்கள் பேசுவதையும் கட்டளைகளையும் மொபைல்போனில் லௌட் ஸ்பீக்கர் மூலம் யானைகளுக்கு கேட்க செய்தனர்.

என்ன ஆச்சரியம்! யானைகள் இரண்டும் குதூகலமாகின. கட்டளைகளுக்கு ஏற்ப நடந்து கொண்டன. இதையடுத்து பாகன்கள் தீனபந்து, பிஸ்வகர்மாவின் உரையாடல்களை டேப் மூலம் பதிவு செய்து அதனை ஒலிபெருக்கி மூலம் போட்டு கேட்க செய்து யானைகளை பராமரித்து வருகின்றனர் ஒகினவா உயிரியல் பூங்கா ஊழியர்கள். யானைகள் மிகுந்த ஞாபக சக்தி கொண்டது.

சிறு வயதிலிருந்து யானைகளை பராமரித்து வந்த தீனபந்து, பிஸ்வகர்மா இருவரும் வங்க மொழியில் பேசி கட்டளைகளை இட்டு பழக்கி வந்ததால் ஜப்பானிய பாகன்களின் கட்டளைகளை அவை ஏற்கவில்லை என பூங்கா ஊழியர்கள் தெரிவித்தனர். (6)

## ஆப்கானிஸ்தானில் பெண்கள் பாடசாலையில் விஷவாயு தாக்குதல்

### 42 பேர் மருத்துவமனையில் அனுமதி

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி காலத்தில் பெண்கள் படிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. தலீபான் ஆட்சி கவிழ்ந்ததும் பெண்கள் பள்ளிக்கூடங்களுக்கு சென்று படிக்கவும் வேலை செய்யவும் அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் வடக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள குண்டூஸ் நகரில் உள்ள ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்தில் விஷவாயு தாக்குதல் நடத்தப்பட்டது.

கறுப்பு உடை அணிந்து வாயையும் மூக்கையும் மூடிக்கொண்ட அந்த மர்ம மனிதன் ஒரு பாட்டிலை பள்ளிக்கூடத்துக்குள் வீசியதை பார்த்ததாக மாணவி ஒருவர் கூறினார். அதில் இருந்து வாசனையுடன் புகை வெளியே வந்ததாகவும் அந்த மாணவி தெரிவித்தார். இந்த வாயுவை நுகர்ந்த மாணவிகளின் உடல் நலம் பாதிக்கப்பட்டது. அவர்களில் 36 பேர் அருகில் உள்ள ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர். அதே போல காபூல் நகரிலும் உள்ள ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்திலும் விஷவாயு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 6 மாணவிகள் உடல் நலம் பாதிக்கப்பட்டு காபூல் நகர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (6)

## ரஷ்ய சுரங்கத்தில் வெடிவிபத்து ; பலியானோர் எண்ணிக்கை 43 ஆக உயர்வு

ரஷ்யாவின் சைபீரியப் பகுதியில் அமைந்த சுரங்கத்தில் நடந்த பயங்கரமான வெடி விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 43 ஆக அதிகரித்துள்ளது. மேலும் பலர் காணாமல் போயிருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

ரஷ்யாவின் சைபீரியப் பகுதியில் அமைந்துள்ள ரஸ்பட்ஸ்கயா என்ற நிலக்கரிச் சுரங்கத்தில் இரு நாட்களுக்கு முன்பு பயங்கர வெடி விபத்து நிகழ்ந்தது. விபத்து நடந்தபோது அங்கு 350 ஊழியர்கள் பணியில் இருந்தனர். பலியானோர் எண்ணிக்கை 43 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் சுரங்கத்தில் பெருகி வரும் வெள்ளத்தில் சிக்கிப் பலர் காணாமல் போயிருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. (6)


## ஈராக்கில் கார் குண்டு தாக்குதல்களில் 114 பேர் பலி

(பக்தாத்)

ஈராக் நாட்டில் மத்திய பகுதியில் உள்ள ஹில்லா என்ற நகரில் உள்ள ஒரு ஜவுளி ஆலையில் பகல் வேலை முடிந்து தொழிலாளர்கள் தங்கள் வீடுகளுக்கு செல்வதற்காக பஸ்களில் ஏறியபோது வாசல் அருகே நிறுத்தப்பட்டு இருந்து 2 கார்களில் வைக்கப்பட்ட குண்டுகள் அடுத்து அடுத்து வெடித்தன. இந்த குண்டு வெடிப்பு சம்பவங்களில் 45 பேர் பலியானார்கள். 140 பேர் காயம் அடைந்தனர்.

பீதி அடைந்த தொழிலாளர்கள் அலறி அடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர் என்று இந்த சம்பவத்தை நேரில் பார்த்த ஜசிம் ஜ்னாத் அபித் என்பவர் தெரிவித்தார்.

தெற்கு ஈராக்கில் உள்ள பஸ்ரா நகரில் 3 கார் குண்டுகள் வெடித்ததில் 20 பேர் பலியானார்கள். பலுஜா நகரில் நடந்த குண்டு வெடிப்பில் 4 பேர் பலியானார்கள். மோசூல், பாக்தாத் ஆகிய நகரங்களிலும் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடந்தன. இந்த சம்பவங்களில் மொத்தம் 114 பேர் பலியானார்கள். 350 பேர் காயம் அடைந்தனர். (4-6)



சர்வதேச அளவில் வான்வெளி பயணத்தையே ஸ்தம்பிக்கச் செய்த ஐஸ்லாந்து எரிமலை, சில நாட்கள் இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் எரிமலைக்குழம்பை உமிழத்துவங்கியுள்ளது.

கேவலமான மனிதனாய் இருப்பதை விட–ஒரு நல்ல குரங்காய் இருக்கலாம்.
–கிரீஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யுத்தத்தின் முடிபை தீர்வாக்கி அதனை அபிவிருத்தி என்ற மாயைத் தேரில் இழுக்கும் அபாயம்

இலங்கையில் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, இனப் பிரச்சினை மீதான சர்வதேசத்தின் பார்வைக்கும்,

யுத்தம் முடிந்த பின்பான இனப்பிரச்சினை மீதான பார்வைக்கும் இடையே மிகுந்த வேறுபாடு உண்டு.

இந்த வேறுபாடு "உயர்ந்த இடத்தில் இருக்கும் போது உலகம் உன்னை மதிக்கும் அதில் கொஞ்சம் கூட இறங்கிவிட்டால் உலகம் உன்னை மிதிக்கும்" என்ற தத்துவத்திற்குட்பட்டதாகும்.

இஃது நமக்கு மட்டும் உரியதல்ல. உலக நியதியும் அதுவன்றே.

அதன் காரணமாகவே "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என்று முடிபெடுக்கப்பட்டது.

எனவே உயர்ந்த இடத்தில்–பலம் பொருந்திய இடத்தில் இருக்கும் போது நோக்கத்தை சாதிப்பது இலகுவானது.

பலமும், மதிப்பும் இழந்து விட்டால் மிகச் சிறிய பகுதியைப் பெற்றுக்கொடுப்பதற்காகப் பெரும்பகுதியை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

இதற்கு மேலாக வென்றவரை போற்றுவதும் தோற்றவரை தூற்றுவதுமான அநாகரிகமும் அரங்கேறும்.

இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவென்றால், தோற்றவர் பலம் பொருந்தியவராக இருந்தபோது அவரோடு சேர்ந்திருந்து புகழாரம் சூடியவர்களே, அதிவேகமாக வென்றவர் பக்கம் சென்று துதிபாடிப் பணிவர்.

இவையெல்லாம் வீரத்தின் அடையாளங்கள் அன்று. மாறாக இவையே கயமைத்தனம்.

இவை பற்றியெல்லாம் விமர்சிப்பது அவசியமற்றதென்பதால் அவற்றை அப்படியே விட்டுவிடலாம்.

அதே நேரம் தமிழினம் புத்திசாலித்தனமாகச் செயற்படுவதுடன் உலக அரங்கில் எமக்கு இருக்கக் கூடிய அனுதாபத்தை உச்சமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் கடுமையாக முயற்சிக்க வேண்டும்.

ஏனெனில் யுத்தத்தின் முடிபென்பது இனப் பிரச்சினையின் தீர்வென்ற பிரமையை அலங்காரப்படுத்தி, அபிவிருத்தி என்ற மாயைத் தேரில் அதனை ஏற்றி உலக ஊர்வலமாக இழுத்துச் செல்லும் அரசியல் வல்லாளர்கள் இருப்பதால் தமிழர் எச்சரிக்கையுடன் இருப்பது மிக மிக அவசியம்.

# யூனியன் வங்கியின் திட்ட முதலீட்டாளராக அமெரிக்க, மலேசிய நிறுவனங்கள் ஒன்றிணைவு

யூனியன் வங்கியின் திட்ட முதலீட்டாளரான மலேசிய ஜென்டின் நிறுவனம் மற்றும் அமெரிக்காவின் ஷோக்கேப் முதலீட்டு நிறுவனம் என்பன இணைந்துள்ளன.

யூனியன் வங்கி 5ஆண்டு திட்டத்துடன் வேகமான வளர்ச்சியை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறது. அதி திறமையான பணிப்பாளர் குழுமத்தையும் அதிகாரிகள் குழுவையும் கொண்டுள்ள யூனியன் வங்கியானது 2 பில்லியன் ரூபாயை மேலதிகமாகக் கொண்டு இலங்கையிலுள்ள நிதிச்சேவை நிறுவனங்களுள் முன்னிலை பெறுவதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் கைகோர்த்துள்ளது.

வர்த்தக ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ள இந்த முன்னோக்கிய பாதையில் பொழுதுபோக்கு மற்றும் அனுசரணை சேவைகளை முன்னெடுக்கும் ஜென்டின் நிறுவனத்துடன் ஐக்கிய அமெரிக்காவின் பண்ட் ஷோக்கேப் நிறுவனமும் திட்ட முதலீட்டாளரான யூனியன் வங்கியுடன் கைகோர்த்துள்ளது.

இது தொடர்பில் யூனியன் வங்கியின் தலைவர் அஜித த சொய்சா கூறுகையில்,

இந்த முதலீட்டின் மூலம் யூனியன் வங்கி பலமடைந்துள்ளமை வெளிப்படையாகின்றது. ஜென்டின் நிறுவனம் ஆசியாவிலே சிறந்த முகாமைத்துவத்தைக் கொண்ட முன்னணி நிறுவனமாகும்.

இந்த ஒன்றிணைவின் மூலம் யூனியன் வங்கியின் வளர்ச்சி மேம்படுவதோடு அரசாங்கத்தின் நிதி கட்டமைப்புக்கமைய பாதுகாப்பான முதலீட்டுக்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

யுத்தம் முடிபடைந்ததை அடிப்படையாகக் கொண்டு இலங்கை, சர்வதேச நிதி சந்தையின் கவனத்தை ஈர்த்துள்ளதோடு வேகமான வளர்ச்சியுடன் முதலீடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் இந் நாட்டிலுள்ள நிறுவனங்கள் அதிவேகமான வளர்ச்சி காணக் கூடும் இலங்கையில் முதலீடு செய்ய பலர் தற்போது சம்மதம் தெரிவித்து வருகின்றனர்.

அத்தோடு யூனியன் வங்கியானது 5 ஆண்டு வளர்ச்சியை இலக்காகக் கொண்டு வெளிநாட்டு நிறுவனங்களுடன் செயற் திட்டங்களை முன்னெடுத்துவருகிறது. அபிவிருத்தி வளர்ச்சியுடன் முன்னோக்கி சென்று கொண்டிருக்கும் யூனியன் வங்கியானது 5 ஆண்டு திட்ட அபிவிருத்தியை இலக்காக கொண்டுள்ளது. இதன் மூலம் நிதி சுலபப்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் அதி குறைந்த மூலதனத்தை ஏற்படுத்தலாம் என்றார்.பிரதம நிறைவேற்று அதிகாரி நிலந்த டி சில்வா கூறுகை யில்,

யூனியன் வங்கியானது 62.1 மில்லியன் ரூபாய் இலாபத்துடன் 2009ஆம் ஆண்டு எடுத்துக்காட்டான வளர்ச்சியை எட்டியது. இதற்கு முந்திய வருடத்தில் 23.1 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்தது. வங்கியின் வைப்பு 10.4 பில்லியன் ரூபாயிலிருந்து 12 பில்லியன் ரூபாய் வரை அதிகரித்தது. வங்கியின் சொத்துக்கள் 12 பில்லியனிலிருந்து 14.1 பில்லியன்களாக வளர்ச்சியடைந்தது என்று கூறினார்.

முறையான திட்டங்களுக்கமைய செயற்பட்டமையால் வங்கியின் புதிய கிளைகள் பலவற்றை அமைக் கூடியதாக இருந்தது என்று யூனியன் வங்கியின் ஆலோசனை / பணிப்பாளர் அனில் அமரசூரிய தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில்,

எமது முறையான திட்டங்களினால் புதிய கிளைகள் பல அமைக்கப்பட்டன. தற்போது எமது கிளைகள் வடக்கிலும் இயங்க ஆரம்பித்துவிட்டன. இனி வரும் காலங்களில் நாட்டில் பல பாகங்களிலும் எமது கிளைவலையமைப்பை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பங்குதாரர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் நோக்குடன் செயல்திறன் மிகு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று குறிப்பிட்டார். (ச)

## சாட்டிக் கிணற்றுள் விழுந்து இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

சாட்டி கடற்கரையிலுள்ள கிணற்றுக்குள் விழுந்து இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த அ.கடோகயன் (வயது 18) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

இவர் சாட்டிக்கடலில் குளித்துவிட்டு கிணற்றுத் தண்ணீரில் குளிக்கச் சென்றவேளை கிணற்றினுள் தவறிவிழுந்து படுகாயமடைந்தார். (ச–30)

## மனித உரிமை ஆணைக்குழுவின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான விசேட செயற் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட மனித உரிமை பாதுகாவலர் பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கலும் புதிதாக பயிற்சிக்கு தெரிவானவர்களுக்கான ஆரம்பநிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டமேற் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பிராந்திய, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்திட்ட அதிகாரி கே.கார்த்திகா தலைமையில் இடம் பெறும் இந்நிழ்வில் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி விக்னராஜா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கடந்த வருடம் (2009) பயிற்சி பெற்ற 30 பேருக்கு சான்றிதழ் வழங்கலும் பாதுகாவலர் பயிற்சிக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட 45 பேருக்கான அறிமுக நிகழ்வும் நடை பெறவுள்ளதாக பிராந்திய செயற்திட்ட அதிகாரி தெரிவித்தார். (ச–30)

## மத்தியஸ்தர் சபைகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கி வரும் மத்தியஸ்த சபைகளின் சேவைகள் மக்களுக்கு மிகவும் பிரயோசனம் அளிக்கக் கூடிய விதத்தில் அமையும் பொருட்டு விளக்கமளிக்கும் கூட்டம் யாழ்ப்பாண அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை 14 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

மேற்படி நிகழ்வில் நீதி அமைச்சின் செயலாளர், மத்தியஸ்த சபைகள்ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் செயலாளர், மாவட்ட நீதிபதிகள், நீதிவான் நீதிமன்ற நீதிபதிகள், பிரதேச செயலாளர்கள், பிரதி பொலிஸ்மா அதிபர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் மத்தியஸ்த சபைகளின் தவிசாளர்கள் கலந்துகொள்ள உள்ளனர். (ச)

## பாபா துன்ப, ஆரோக்கிய , ஜீவிய நிவாரணியாவவர்

பாபா இப்பூவுலகில் அவதாரம் செய்திருப்பதை பல விதமான அடையாளங்கள், அற்புதங்கள் மூலமாக அறிவித்துக் கொண்டிருக்கின்றார். இருந்தும் எமக்குள்ளேயிருக்கும் கர்வம் இறைவனை இறைவனாக பார்க்க விடுவதில்லை.

பாபாவைச் தேடிச் சேர்பவர்கள் வெறுமனே விசாரணையின்றி கண்ணை மூடிக்கொண்டு சேர்வதில்லை பாலைவனத்தை தாண்டிச் செல்பவனை எப்படி தாகம் வாட்டி நீரை அருந்தும் இடம் தேடுவது போன்றே பாபா எனும் அருளூற்றை நாடி அவருடைய அருளுரையை ஆசியைப் பெற வேண்டுமென்ற ஆவலால் உந்தப்பட்டே சாயி மாதாவைச் சேருகிறார்கள்.

இப்பூவுலகில் நான் அநாதையாகிவிட்டேன் இனியாருளர் என்ற தவிப்போடு; உடலை நோய் எனும் அரக்கன் தாக்கும் காலை; ஏதோ ஒரு வாட்டுதலால் உள்ளம் நொந்து; தெய்வீகத்தின் சாயல் இவ்வளவு காலமும் இல்லாது நாளைக் கழித்தேனே என்ற எண்ணம் வாட்ட ; ஏதோ என்னை இயக்கும் சக்தி ஒன்றுள்ளது; அந்த சக்திதான் எல்லாம் வல்ல பரந்த தெய்வம் ஸ்ரீசத்ய சாயி பாபா என்று தன்னை அர்பணிப்போடு கூடிய உணர்வோடுதான் அதிகமானோர் பாபாவைத் தேடிச் சேருகின்றார்கள்.

பாபாவை ஆராதிக்கின்றவர்களில் அதிகமாகனோர் இறைவனாக ஏற்க மறுத்து மனித வடிவில் தெய்வமா எனக் கேள்வி கேட்டவர்களே எனலாம். விஞ்ஞானத்தை மிஞ்சிய மெய்ஞானத்தை நம்பாது பாபாவிடமே சென்று அவரிடமே ஆய்வு செய்து பின்பு அவரிடமே தஞ்சமென தங்கியவர்கள் ஏராளம்.



பகவானும் சந்தேகங்களைப் போக்கி விசாரணை எனும் பண்படுத்திய நிலத்தில் நம்பிக்கை எனும் விதை விதைப்பதில் பாபா ஆர்வம் காட்டுகிறார். அவருடைய ஆசியை அரவணைப்பை பெறுவதற்கு உயர்ந் தவர்– தாழ்ந்தவர்,வசதி யுற்றோர் –வசதியற்றோர் என்ற பாகுபாடேயில்லை அன்பெனும் ஊற்றை வார்த்து சமத்துவம் எனும் போர்வையால் உலக ஜீவராசிகள் அனைத்தையும் போர்த்திடவே என்னுடைய இந்த மனிதப் பிரவேசம் என்கிறார் பாபா. சத்ய சாயி பாபாவை ஒரு முறை சிந்தி .உனக்கு பலமுறை தன்னைக் காட்டியருளுவார். தஞ்சமென பாபாவை பற்றி விடு. உன் குடும்பம், கோத்திரம் முழுவதுமே அவர் பாதுகாப்பு நிறைந்ததாகிவிடும். பாபா துன்ப, ஆரோக்கிய, ஜீவிய நிவாரணியாவார்.

ஜெய்சாயிராம் யாதவன்

# துர்க்காதேவி தேவஸ்தான வளர்ச்சிப் பணியில் 30 ஆண்டுகள் பெரும்பங்காற்றிய சிவவாகீசர் ஐயா



வழிபாட்டுப் பெருமை மிக்க தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய வரலாற்றில் 30 ஆண்டுகளாக தேவஸ்தான பொதுச் செயலாளராக கடமையாற்றியவர் அதிபர் சு. சிவவாகீசர். இவர் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியசாலை உயர்வுபெற உழைத்த அதிபர்.

இவரின் தந்தையார் புகழ்பூத்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் நீண்டகால ஆசிரியர் வ. சுப்பிரமணியம் ஆவார்.

சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் நிர்வாகப் பணியில் மிகவும் முன்னோடியாகச் செயற்பட்ட சிவவாகீசர் ஐயா நிர்வாகப் பணியில் உறுதிப்பாடு கொண்டவர். உண்மையானவர்களுக்கு பெருமதிப்பு வழங்குபவர். பொது உடமைக் கொள்கைகள் கொண்ட எண்ணக் கரு உடையாவர்.

சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களின் கோயிற் பணிக்கும் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பணிக்கும் ஓர் உந்துசக்தியாக அமையப் பெற்றவர். வட்டு திருஞானசம்பந்தாவில் அதிபராக இருந்த காலத்திலும் பின்னரும் அதி உயர் வளர்ச்சிக்கு இவர் ஒரு மைல்கல். செயலாளராகப் பணியாற்றிய போது செயற்கரிய, நடைமுறைப்படுத்திய திட்டங்கள் அநேகம்.

பொது நலச்சிந்தனை கொண்ட சிவவாகீசர் ஐயா கோயிற் பணி செய்யும் அந்தணர்களுக்கும், பணியாளர்களுக்கும் மாதாந்தம் சேம உதவு தொகைப் பணம் வழங்கி தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம் கிளையில் வைப்பிலிட வேண்டும் என்ற திட்டத்தை நிர்வாக சபையில் முன்மொழிந்தார். அதனை மறுகணமே சிவத்தமிழ் செல்வி அம்மையாரும் முன்மொழிந்தார். இத்திட்டம் நிறைவேறியது. அவருடைய திட்டம் வெற்றி கண்டது.

**இன்று அதிபர் சு.சிவவாகீசர் ஐயாவின் பிறந்த தினமாகும்**

இன்று துர்க்காதேவி தேவஸ்தானத்து நிதி அலுவலகம் அமைந்துள்ள இடம் அன்று "திலக கோட்டமாக" இருந்தது. இது இவரின் தாயார் திலகவதி அவர்களின் நினைவாக அன்னதானம் வழங்கும் பொருட்டு அமைக்கப் பெற்றது.

தேவஸ்தான வளர்ச்சிப் பணியில் துரித நிலை கண்டது நிதி, நிர்வாகம். எனவே இதன் பெயரை 'நிதி அலுவலகம்' என மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

சிவவாகீசர் அவர்களுடைய தர்மத்தில் உள்ள பெயரை யான் மாற்ற முன்வரமாட்டேன். வாகீசர் ஐயாவுடன் கேளுங்கள் அவர் ஏற்றுக்கொண்டால் மாற்றி எழுதுங்கள் என்று சிவத்தமிழ் செல்விஅம்மா தெளிவுபடுத்தினார்.

அன்று மாலை தொல்புரத்தில் இருந்து சிவவாகீசர் ஐயார் வந்தார். அப்பொழுது இது சம்பந்தமான விடயத்தைக் கூறினேன். கூறிய கணமே பெயர் மாற்றம் செய்ய பெரு மனதோடு சம்மதித்தார். உடனே சிவத்தமிழ் செல்வி அம்மா அவர்களிடமும் தமது அனுமதியைக் கூறினர்.

பெரியாரின் பெருந்தன்மை எம்மை எல்லாம் புல்லரிக்கச் செய்தது. சிவத்தமிழ் செல்வி அம்மா பொதுச் செயலாளர் சிவவாகீசர் அவர்களுக்குக் கொடுத்த மதிப்பும், பெரியார் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாருக்குக் கொடுத்த பெருமதிப்பும் இன்றும் பசுமை நினைவாக உள்ளது.

**கா.சிவபாலன்**

இந்நிதி அலுவலகத்தின் பெரும் சிறப்பை போற்றாதவர்கள் இல்லை. இவரின் பணிக்களம் எல்லைக்குட்பட்டாலும் அவர் மனோ களம் உலகளாவியது என்ற பாரதி நேசனின் கருத்தை இன்றைய பிறந்த நாளில் சிந்திப்போமாக.

## பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் நடத்தப்பட்ட பொதுச்சுகாதார வெளிக்களப் பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்த 32 பேரையும் நியமனம் வழங்கும் ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு தவறாது சமுகமளிக்குமாறு பிராந்திய மலேரியா தடை இயக்க வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம் கேட்டுள்ளார். (4)

## வவுனியா நகர் பகுதியில் குரங்குகள் அட்டகாசம்

(கொழும்பு)

வவுனியா நகர்பகுதியில் குரங்குகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

மருத்துவமனையின் விடுதிகளினுள் புகுந்து பொருட்களை எடுத்துச் செல்கின்றது.

இதேபோல் வவு/ சைவப்பிரகாச மகளிர் வித்தியாசாலைக்குள் புகுந்து மாணவர்களை கடிக்கின்றது. புத்தகங்களை எடுத்து சிதைக்கின்றது.

இதனால் மாணவர் மத்தியில் பய உணர்வு ஏற்படுகின்றது. சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இதற்கு தீர்வு காண உதவுமாறு பெற்றோர் வேண்டுகின்றனர். (6-22)

## இயற்கை வள அழிவு தேசிய பொருளாதாரங்களுக்கு பாதக விளைவை ஏற்படுத்தும் - ஐ.நா.எச்சரிக்கை

(கொழும்பு)

இயற்கை வளங்களின் அழிவு தேசிய பொருளாதாரங்களுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இயற்கை வளங்கள் துரித கதியில் அழிவடைந்து வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலங்களுடன் ஒப்பீடு செய்யும் போது உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் ஆயிரம் மடங்கு வேகமாக அழிவடைந்து செல்வதாக ஐக்கிய நாடுகளின் உயிர் பல்வகைத் தன்மை பிரிவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஹமட் டுஜொகிலாப் தெரிவித்துள்ளார்.

முலையூட்டிகள், ஊர்வன, பறவைகள், மீன் இனங்கள் என்பன 1970 ஆம் ஆண்டுகளில் காணப்பட்டதனை விடவும் மூன்றில் ஒரு மடங்கு அழிவடைந்துள்ளதாகவும் உயிர்ப் பல்வகைமையைப் பேணும் சர்வதேச நாடுகளின் இலக்கு ஒருபோதும் எட்டப்பட்ட முடியாததெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


இயற்கை வள அழிவிற்கும் பொருளாதார தாக்கங்களுக்கு இடையில் நேரடித் தொடர்பு காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

உயிர்ப் பல்வகைமையின் முக்கியத்துவம் தொடர்பில் அநேகமான நாடுகள் கருதுவதில்லை எனவும் அதன்மூலம் எதிர்காலத்தில் பாரிய பின்விளைவுகள் ஏற்படக்கூடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (6)

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் 54ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சர்வதேச வாழும் கலை அறநிறுவன - யாழ்.மையத்தினரால் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (6)



கொழும்பில் நடைபெறவுள்ள லயன்ஸ் கழக ஆளுநர்கள் தெரிவில் யாழ். மாவட்டத்திலிருந்து உபஆளுநர் பதவிக்கு போட்டியிடும் லயன் என். எஸ்.தங்கராஜாவை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் மாவட்ட ஆளுநர் எஸ்.சிவானந்தா மற்றும் லயன்ஸ் பிரமுகர்களை படத்தில் காணலாம்.

## வடமராட்சி உள்ளூர் சந்தைகளில் வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

(மருதங்கேணி)

வடமராட்சிப் பகுதியில் வெங்காயத்தின் விலை ஏறிக் கொண்டே போகிறது. அந்தர் 2500 ரூபாவிற்கு விற்கப்பட்ட வெங்காயம் இப்போது அந்தர் 4000 ரூபாவிற்கு விற்கப்படுகிறது.

வடமராட்சிப் பகுதியிலிருந்த வலிகாமம் விவசாயிகள் விதை வெங்காயத்தை ஏராளமாக கொள்வனவு செய்கிறார்கள். கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்த மக்களும் வெங்காயச் செய்கையில் ஆர்வங் காட்டி வருவதால் வடமராட்சிப் பகுதியிலிருந்து விதை வெங்காயத்தை கொள்வனவு செய்து வருகிறார்கள்.

இதனால் வெங்காயத்தின் விலை அதிகரித்துக்கொண்டு போகிறது. அத்துடன் கொழும்பு வியாபாரிகளும் வெங்காயத்தை கொள்வனவு செய்து கொழும்பு அனுப்புவதாலும் விலை அதிகரித்துள்ளது.

வடமராட்சியில் உள்ளூர் சந்தைகளிலும் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது. 1கிலோ 60ரூபாவிற்கு விற்கப்பட்ட வெங்காயம் இன்று ஒரு கிலோ 100 ரூபாவிற்கு விற்கப்படுகிறது.

வடமராட்சி விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதை வெங்காயத்தை வைத்துக் கொண்டு மிகுதி எல்லாவற்றையும் விற்று வருகிறார்கள்.

இதனால் வடமராட்சிப் பகுதியிலும் சில நாட்களின் பின் வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்படும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (6-35)

## 5 மாவட்டங்களில் மண் சரிவு அபாயம் 'ரொனாடோ' சூறாவளி எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டில் நிலவும் மோசமான கால நிலையினால் ஐந்து மாவட்டங்களில் மண் சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் மின்னல் தாக்குதலினால் இதுவரை 17 பேர் பலியாகியுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.


மாத்தறை, கேகாலை,மாத்தளை, இரத்தினபுரி மற்றும்பதுளை ஆகிய மாவட்டங்களிலேயே மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் மண்சரிவுகள் ஏற்படக்கூடிய இடங்களில் வாழ்கின்ற மக்களை மிக அவதானமாக இருக்குமாறும் நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் வாழ்கின்ற மக்கள் குன்றுகளைக் குடைந்து தமது உறையுள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதனால், இவ்வாறான இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் நிலவுகின்ற மோசமான கால நிலையுடன் டொனெடோ சூறாவளி வீசக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளது. இவ்வாறான சூறாவளி கடந்த காலங்களில் நாட்டின் பல பாகங்களிலும் வீசியமையினால் பல்வேறு அனர்த் தங்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (6-4)

# இந்திய அணிக்கு மரண அடி; இலங்கை அரையிறுதிக்கு தகுதி

## இன்று இங்கிலாந்து அணியுடன் மோதல்



(சென்லூசியார்)

சங்கக்கார, மத்யூஸ், கபுகெதர கூட்டணியின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி இறுதிவரை போராடி 5 விக்கெட்டுக்களால் இந்திய அணியை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது.

இதில் ஹட்ரிக் தோல்வியைச் சந்தித்த இந்திய அணி தொடரிலிருந்து வெளியேறியது.

மேற்கிந்தியத்தீவுகளில் நடக்கும் ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 உலகக்கிண்ண தொடரில் நேற்றுமுன்தினம் சென்லூசியாவில் நடைபெற்ற சுப்பர்-8 சுற்றின் 11ஆவது போட்டியில் எப் பிரிவிலுள்ள இலங்கை, இந்திய அணிகள் மோதின.

இப் போட்டியில் வெற்றிபெற்றால் மட்டுமே அரையிறுதி வாய்ப்பை பெறலாம் என்ற நிலையில் இரு அணிகளும் களமிறங்கின.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடி இந்திய அணிக்கு கார்திக்-காம்பீர் ஜோடி சுமாரான ஆரம்பத்தை வழங்கியது.

இதில் தினேஷ் கார்த்திக் 12 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 4.2 ஓவர்களில் 30 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டையிழந்தது.

அடுத்து இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த காம்பீர்-ரெய்னா அதிரடி இணைப்பாட்டத்தை வழங்கினார்.

இதில் காம்பீர் 32 பந்துக்ளில் (3 பவுண்டரிகள் உட்பட) 41 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து அணித்தலைவர் தோனி களமிறங்க மறுமுனையில் அதிரடியைத் தொடர்ந்த சுரேஷ் ரெய்னா 37 பந்துகளில் அரைச் சதத்தைப் பெற்றார்.

எனினும் சுரேஷ் ரெய்னா 47 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த யுவராஜ் சிங் வழமை போன்று ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து வந்த யூசுப்பதான் ஓரளவு ஆறுதலளிக்க இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 163 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் தோனி ஆட்டமிழக்காமல் 19 பந்துகளில் (ஒரு சிக்ஸர் உட்பட) 23 ஓட்டங்களையும் யூசுப் பதான் 9 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 13 ஓட்டங்களையும் எடுத்தார்.

பந்துவீச்சில் திலான் துஷார, லசித் மலிங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பெரேரா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 164 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் தடுமாறியது.

இதில் நெகரா வீசிய ஆட்டத்தின் முதலாவது பந்தில் பவுண்டரி அடித்த மஹேல ஜெயவர்த்தனா 04 ஓட்டங்களுடன் மூன்றாவது பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்த ஓவரில் சனத் ஜெயசூரியா பூச்சியத்துடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 1.5 ஓவர்களில் 6 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த டில்சான்-சங்கக்கார ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஆறுதலளித்தனர்.

எனினும் திலகரட்ண டில்சான் 26 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 33 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார-மத்யூஸ் ஜோடி ஆரம்பத்தில் அடக்கி வாசித்தனர்.

இதில் அதிரடியைத் தொடர்ந்த அணித்தலைவர் சங்கக்கார 33 பந்துகளில் (2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 46 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் அடுத்துக்களமிறங்கிய கபுகெதர அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

இலங்கை அணியின் வெற்றிக்கு இறுதி ஓவரில் 13 ஓட்டங்கள் தேவைப்பட்டது. நெகரா வீசிய முதல் பந்தில் சிக்ஸர் அடித்து அசத்தினார் மத்யூஸ். அடுத்து மூன்று பந்தில் 4 ஓட்டங்களை சேர்த்தனர்.

கடைசி இரண்டு பந்தில் 3 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் 5ஆவது பந்தில் அஞ்சலோ மத்யூஸ் 37 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 46 ஓட்டங்களை எடுத்து ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

கடைசிப் பந்தில் தேவை 3 ஓட்டங்கள். பந்து வீச்சை எதிர் கொண்ட கபுகெதர சுப்பர் சிக்ஸர் விளாச இலங்கை அணி திரில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 167 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் கபுகெதர 16 பந்துகளில் (2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 37 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்தார்.

பந்துவீச்சில் அறிமுக வீரர் வினேய் குமார் 2 விக்கெட்டுக்களையும் நெகரா, யூசுப் பதான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் எப் பிரிவிலுள்ள இலங்கை அணி இரண்டாவது வெற்றியைப் பெற்று 4 புள்ளிகளைப் பதிவு செய்து அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

**தொடரும் சோகம்**

கடந்த 2007ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.சி.சி. முதலாவது இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் சம்பியனான இந்திய அணி 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது இருபது-20 உலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேற முடியாமல் வெளியேறியது.

இம்முறையும் நம்பிக்கையுடன் களமிறங்கிய இந்திய அணி சுப்பர்-8 சுற்றுடன் வெளியேறியுள்ளது.

**இலங்கை-இங்கிலாந்து இன்று அரையிறுதியில் மோதல்**

ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் முதலாவது அரையிறுதிப்போட்டி இன்று சென்லூசியாவில் நடைபெறுகின்றது.

இதில் இங்கிலாந்து-இலங்கை அணிகள் மோதுகின்றன. இலங்கை நேரப்படி இன்று இரவு 11 மணிக்கு ஆரம்பமாகும் இப் போட்டி சென்லூ சியாவில் நடைபெறுகின்றது.

இப் போட்டியில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி இலங்கை அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

## சொந்த மண்ணில் மேற்கிந்தியத்தீவுகள் அரையிறுதி வாய்ப்பையிழந்து சோகம்

(சென்லூசியார்)

சகலதுறையிலும் ஜொலித்த அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை இலகுவாக வீழ்த்தியது.

இப் போட்டியில் தோல்வியடைந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி சொந்த மண்ணில் அரையிறுதி வாய்ப்பையிழந்து வெளியேறியது.

மேற்கிந்தியத்தீவுகளில் நடக்கும் ஐ.சி.சி. முதலாவது இருபது-20 உலகக்கிண்ண தொடரில் நேற்று முன்தினம் சென்லூசியாவில் நடைபெற்ற சுப்பர்-8 சுற்றின் 12 ஆவதும் இறுதியுமான போட்டியில் எப் பிரிவைச் சேர்ந்த மேற்கிந்தியத்தீவுகள்-அவுஸ்திரேலியா அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முன்னணி வீரர்கள் சோபிக்காத நிலையில் 19 ஓவர்களில் 105 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் ராம்நரேஷ் சர்வான் 31 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 26 ஓட்டங்களையும் சிவநாராயணன் சந்தர்போல் 18 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 24 ஓட்டங்களையும் பொல்லார்ட் 13, மில்லர் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சிமித் 4 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஜோன்சன், டேவிட் ஹசி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் நான்ஸ், வோட்ஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 106 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்




குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 16.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 109 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் ஹடின் 46 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 42 ஓட்டங்களையும் வேர்னர் 12 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 25 ஓட்டங்களையும் அணித்தலைவர் கிளார்க் 16 ஓட் டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரெய்லர், பென், ஹயில் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் எப் பிரிவிலுள்ள அவுஸ்திரேலிய அணி சுப்பர்-8 சுற்றில்தான் விளையாடிய 3 போட்டிகளிலும் வெற்றி பெற்று 6 புள்ளிகளைப்பதிவு செய்து முதல் அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி நாளை நடைபெறும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியை சந்திக்கிறது.

இதேவேளை இப் போட்டியில் தோல்வியடைந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி சுப்பர்-8 சுற்றில் ஒரு வெற்றியைப்பெற்று தொடரிலிருந்து விடைபெற்றது.





## இராணுவக் கட்டுப்பாட்டின்...

இது தொடர்பான விசாரணைகள் பிரதம நீதவான் சம்பாஜானகி ராஜரட்ண முன்னிலையில் நேற்று இடம்பெற்றது. இதில் நாட்டுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்துவதாகக் குற்றஞ்சுமத்திய பாதுகாப்புத் தரப்பினர்,

சர்வதேசத்தின் மத்தியிலும் தமிழ் மக்களின் மத்தியிலும் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்துவதாக அமைந்ததாக மன்றில் சுட்டிக் காட்டினர்.

பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வசந்த நவரட்ண பண்டார இது தொடர்பான வாதத்தை முன்வைத்தார். சரத் பொன்சேகா சார்பில் மன்றில் வாதிட்ட சிரேஷ்ட சட்டத்தரணி நலீன் லத்துவஹெட்டி,

பொன்சேகாவின் உடல் நலம் மற்றும் பாதுகாப்புக் கருதி தொடர்ச்சியாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைக்குமாறு கோரினார். அதே கருத்தினை மனுத்தாரர்களும் முன் வைத்ததால் சிறைச்சாலையில் தடுத்து வைக்க முடியாத காரணத்தினால் ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவக் கட்டுப்பாட்டில் வைக்க உத்தரவிடுவதாகவும் அவரது பாதுகாப்புத் தொடர்பில் இராணுவத்தினர் முழுக் கவனம் செலுத்த வேண்டும் எனவும் நீதவான் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி என்ற வகையில் இந்த வழக்கினை விசேடமாகக் கொள்வதாகக் குறிப்பிட்ட நீதவான், எதிர் வரும் 26 ஆம் திகதி வரை வழக்கை ஒத்தி வைப்பதாகத் தெரிவித்தார்.

வழக்கு விசாரணைகளை ஒட்டி நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் சோதனைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-3,5,9)






## பெண்ணைத்...

கொலை முயற்சிக்குள்ளான லங்காதேவி எனும் 37 வயதான பெண்ணுடைய மகளினைத் திருமணம் செய்து தருமாறு வற்புறுத்தியே இந்தக் கத்திக் குத்து இடம்பெற்றதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

வன்னி யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் கணவர் மற்றும் மகன் ஆகியோர் கைது செய்யப்பட்டு விசேட தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் தனது ஏனைய பிள்ளைகளுடன் கரவெட்டிச் சம்பந்தர் கடைப் பகுதியில் இவர் வசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-5,7)

## யாழ்.மேல் நீதிமன்ற சட்டத்...

தெரிவிக்கும் அதேவேளை நிலைமை சீரடைய ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்களும், நடைமுறைகளும், செயற்படுத்தும்வரை நீதிமன்றத்தைப் பகிஷ்கரிப்பதென ஏகமனதாக தீர்மானம் எடுத்தது.

இதனைத் தொடர்ந்து, யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜாவால் கூட்டப்பட்ட கூட்டத்தில், இச் சங்கத்தின் உறுப்பினர்கள் முழுமையாகக் கலந்துகொண்டு சட்டமும், நீதி நிர்வாகமும் சீர்குலைந்து இருப்பதை அங்கு சமுகமாக இருந்த அத்தனை பொலிஸ், இராணுவ, சிவில் அதிகாரிகளுக்கு குறிப்பாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுட்டிக் காட்டி நிலைமையை தெளிவுபடுத்தினார்.

இத் தருணத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா கொழும்புடன் தொடர்பு கொண்டு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை இந்த மாநாட்டில் அத்தனை உயர் அதிகாரிகள் முன்பாக பகிரங்கமாக விளக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நீதிபதிகளின் பாதுகாப்பு மற்றும் சந்தேக நபர்கள் கைது செய்யப்படுவது, சரியான திசையில் சரியான நடவடிக்கை என எமது சங்கம் ஏக மனதாக முடிவெடுக்கின்றது.

இதன் அடிப்படையில் இன்று 13ஆம் திகதி முதலாக நீதிமன்ற பகிஷ்கரிப்பைக் கைவிட்டு கடமைக்குச் செல்வதாக ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியது என்றுள்ளது. (ச)

## புலிகளின் மற்றொரு வடிவ...

கைப் பிரஜைகள் அல்ல எனவும் அவர்கள் ஒருபோதும் இலங்கைக்குத் திரும்ப மாட்டார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜீ.ரீ.எப். அமைப்புப் போன்றே பி.ரீ.எப். அமைப்பும் மிகவும் ஆபத்தானது என அவர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு எவ்வாறான தீர்வுத் திட்டங்களை வழங்க வேண்டும் என்பது குறித்துப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்குத் தெளிவான விளக்கம் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

குறிப்பாக எந்த நேரத்தில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் எந்த நேரத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்பது குறித்துக் கோத்தபாய விளக்கத்துடன் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேவை ஏற்பட்டால் கடுமையான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சிரேஷ்ட விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த கோத்தபாய தயங்க மாட்டார் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு மன்னிப்பு வழங்கியமை தொடர்பில் மேற்குலக நாடுகள் கவனிக்கத் தவறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# ஐ.தே.கவின் தோல்விக்கு ரணில் மட்டும் காரணமல்ல

## கொலன்னாவ அமைப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியன் தோல்விகளுக்குக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டும் காரணமில்லை எனக் கட்சியின் கொலன்னாவத் தொகுதி அமைப்பாளர் கருணாசேன கொடிதுவக்குத் தெரிவித்துள்ளார்.

தேசியத் தலைமைத்துவத்தைப் போன்றே கிராம மட்டத்திலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். நகரங்களில் மட்டுமன்றி ஐக்கிய தேசியக் கட்சிக் கிராமங்களிலும் தோல்வியைத் தழுவியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே கட்சியின் அடிப்படை பொறிமுறைகளையும் மாற்றி அமைக்க வேண்டியது மிகவும் அவசியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன மேற்குலக நாடுகளை விடவும் கிழக்கு ஆசிய நாடுகளின் ஆட்சி முறைகளையே பின்பற்றி ஆட்சி நடத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளின் போது தொடர்பாடல் பிரச்சினை காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் தேவை என்ன என்பதனைப் புரிந்து கொண்டு மக்களுக்குச் சேவையாற்ற வேண்டியது மிகவும் அவசியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## விஷம்...

முறைப்பாட்டுக் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

அந்த கடிதங்களில் முதல் வகுப்புக் கைதிகளுக்குத் தனக்கு உதவியாக ஒரு கைதியை வைத்திருக்க உரிமையுண்டு. ஆனால் நளினிக்குச் சிறையில் பிரச்சினை தொடங்கியதில் இருந்து இந்த வசதி மறுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தனது உணவில் சிறைக் காவலர்கள் மூலமாக மருந்து கலக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அந்தப் புகாரில் தெரிவித்துள்ளார். (ச-5)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை பூபாலபிள்ளை (மாஸ்ரர்)

(ஓய்வு பெற்ற அதிபர்)



மன்னம்பிட்டியை பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பூபாலபிள்ளை (மாஸ்ரர்) 11.05.2010 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலம் சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான தம்பிமுத்து-தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், கமலாவின் அன்புக் கணவரும், அமரர் ஸ்ரீதர், ஸ்ரீநிவாசன், ஸ்ரீஸ்காந்தன், ஜெயஸ்ரீ, ஸ்ரீரங்கதாசன், அமரர் ஸ்ரீகானமுரளிதரன், ஸ்ரீகானமுகுந்தன் ஆகியோரின் அருமைத் தந்தையும், தர்ஷினி, ஷோபனா, தற்குணராசா, சுமதி, ஜெயஸ்ரீ ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டினோசா, மதுஷா, விஷ்ணு, ஆகாஷ், ஜனுஷா, மதுஷன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), சிந்துஜன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), மயூரிகா, திரிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், தங்கம்மா, குஞ்சுப்பிள்ளை, நாகலிங்கம், அழகுதங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேலுப்பிள்ளை, பேரின்பராசா, ரட்ணசிங்கம், ரஞ்சிதம், அருமைத்துரை, பரிமளா, மாலினி, சரோஜா மற்றும் அமரர் தருமராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 13.05.2010 வியாழக் கிழமை மாலை 4.30 மணிக்கு இவரின் இல்லத்தில் நடைபெற்று புகழுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துர்க்கையம்மன் கோயில் வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
077 3719650

(1385)

## இரண்டாம் கட்டப் போராட்டம்...

புலிகளின் பிரதிநிதிகள் நாடு கடந்த தமிழீழ ராஜ்ஜியம் ஒன்றை அமைப்பதில் முனைப்புக் காட்டி வருகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும் புலிகளின் சர்வதேச செயற்பாடுகள் தொடர்வதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச ரீதியான பிரசார நடவடிக்கைகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் புலிகளுக்கு எதிரான யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டுள்ள போதிலும் சர்வ தேச ரீதியிலான யுத்தம் தொடர்கின்றது. இதனைத் தடுக்க தனித்தனியாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தமிழீழ விடுதலைப்புலிகளின் எந்தவொரு உறுப்பினர்களும் இராணுவத்தினால் தடுத்து வைக்கப்படவில்லை.

குறித்த உறுப்பினர்களுக்கு எதிராகப் பொலிஸார் கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பார்கள். தமிழீழ விடுதலைப்புலிச் சந்தேக நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்புக்குள் ஊடுவிய அநேக விடுதலைப்புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மறைந்திருக்கும் உறுப்பினர்களால் அச்சுறுத்தல்கள் ஏற்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)


**விற்பனைக்கு**

10'x 8' அலுமினிய பிற்றிங் மற்றும் கண்ணாடி சோக் கேஸ் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளிற்கு:
37, இந்துக்கல்லூரி
ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
0776072189
(1388)



**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் விடுதி**

எமது கல்லூரியின் மாணவர் விடுதி மீண்டும் இயங்க உள்ளதால் மாணவர் விடுதியில் தங்கி கல்வி கற்க விரும்பும் மாணவர்களின் பெற்றோர் கல்லூரி அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. 021 222 2184
021 222 3658
071 808 4818

அதிபர்

(சி-251)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்13.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.